விலை ரூபா 1-00 ★

BOND INSTITUTES
யாழ்ப்பாணம்
A/L புதிய வகுப்புகள்
(விஞ்ஞானம் - வர்த்தகம் - கலை)
✶ பகல் நேர
✶ காலை மாலை நேர
✶ வாரஇறுதி வகுப்புகள்
ஆரம்பம்: இன்று 9- 10 -82
(விடுதிவசதி உண்டு)
போன்: 24258 தந்தி: BOND
4694

ஈழநாடு
THE EELANADU

BOND INSTITUTES
Jaffna
CITY AND GUILDS (LONDON)
May-June 1983
ELECTRICAL ENGINEERING
TECHNICIAN
I, II and III
Power Electronics
Commencing: To day 9-10-82.
(692)

மலர் 24 புரட்டாதி 23 ஜுல்கஜ் 21 இதழ் 238
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 9—10—82

# யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தல் ஆட்சேபமனு

# தள்ளுபடி! அப்பீல் செய்ய அவகாசம்

## "சட்ட நடைமுறை மீறப்பட்டாலும் தேர்தல் முடிவுகளைப் பாதிக்கவில்லை"

---நீதியரசர்கள்

(இ. கந்தசாமி)

**யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்தி சபையின் தேர்தல் செல்லுபடியாகாதெனத்தீர்ப்பளிக்கக்கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு நேற்று செலவுத்தொகையின்றித்தள்ளுபடி செய்யப்பட்டது.**

**இத்தேர்தலின்போது தேர்தல் சட்ட நடைமுறைகள் மீறப்பட்டிருந்த போதிலும் தேர்தல் முடிவுகளைத் தீர்மானிப்பதை அது பாதித்திருக்கவில்லையென்று தீர்ப்பில் நீதியரசர்கள் தெரிவித்துள்ளனர்.**

யாழ் மாவட்டஅபிவிருத்தி சபைத்தேர்தல் 1981ம் ஆண்டு ஜூன் மாதம் நடைபெற்றது தெரிந்ததே. அத்தேர்தலின் போது பலகட்சிகள் போட்டியிட்டபோதிலும், தேர்தலில் பல தில்லுமுல்லுகள் இடம் பெற்றதாகப் பரவலாகக் குற்றஞ்சாட்டப்பட்ட போதிலும் தமிழர் விடுதலைக்கூட்டணி வேட்பாளர்கள் சபையின் அதிகாரத்தைக் கைப்பற்றினார்கள்.

தேர்தல் நடைமுறையில் இடம்பெற்ற சீர்கேடுகளைச் சுட்டிக்காட்டி அத்தேர்தல் செல்லுபடியாகாதெனத் தீர்ப்பு வழங்குமாறு கோரி சட்டத்தரணி திரு. ராஜராஜேஸ்வரன் தங்கராஜா மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

இம்மனுவில் அட்டோர்ணி ஜெனரல் திரு. சிவா பசுபதி முதலாவது எதிர்மனுதாராகவும் அப்போதைய தேர்தல் ஆணையாளர் திரு. எம். ஏ. பியசேகர இரண்டாவது எதிர் மனுதாராகவும் தேர்தல் அதிகாரி திரு. யோகேந்திரா துரைசாமி மூன்றாவது எதிர் மனுதாரராகவும் குறிப்பிடப்பட்டிருந்தனர். யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைக்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் அனைவரும் 4 தொடக்கம் 13ம் எதிர்மனுதாரர்களாகவும் திரு. ஏ. அமிர்தலிங்கம் திரு. குமார் பொன்னம்பலம், திரு. ஆர்ஷா அபேவர்த்தன, திரு. எஸ். வி. சந்திரசேகர, திரு. செல்லையா குமாரசூரியர், திரு. பெர்ணண்டோ ஜோசப், திரு. ஜே. அந்தனி ஆகியோர் முறையே 14, 15, 16, 17, 18, 19, 20வது எதிர்மனுதார்களாகக் குறிக்கப்பட்டிருந்தனர்.

நீதியரசர்கள் ஜே. செனவிரத்னவும்ஜே.அபேவர்த்தனவும் இவ்வழக்கை விசாரித்தனர். தீர்ப்பை நீதியரசர் செனவிரத்தின வாசித்தார். 66 பக்கங்கள் கொண்ட தீர்ப்பை காலை 10-05 மணிக்கு வாசிக்கத்தொடங்கிய நீதிபதி 15 நிமிடங்களில் முடித்தார்.

இவ்வழக்கு விசாரணை மொத்தம் 23 நாட்கள் நடைபெற்றது. தீர்ப்பு வழங்குவது இருதடவைகள ஒத்திவைக்கப்பட்டது.

### பொது நோக்கம்

தீர்ப்பை அறிவதற்கு நீதிமன்றத்தில் கூடியிருந்தவர்களில் மனுதாரின் தாயாரும் காணப்பட்டார். மனுதார் தேசிய உடையும் சட்டத்தரணிகளுக்கான மேலங்கியுடன் காணப்பட்டார்.

[8-ம் பக்கம் பார்க்க]

# குருநகர் ராணுவ முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

தமிழ் தொழிற்சங்க கூட்டணியின் பிரமுகரும், அரசாங்க எழுதுவினைஞர் சங்க யாழ். கிளைத்தலைவருமான மெட்ராஸ் மெயில் நேற்று இராணுவத்தினரால் குருநகர் முகாமுக்கு அழைத்துச்செல்லப்பட்டார்.

யாழ். கல்விக் கந்தோரில் பணியாற்றும் இவரை குருநகர் முகாமிலிருந்து வந்த இராணுவத்தினர் அங்கு பொறுப்பாக இருந்த அதிகாரியின் உத்தரவைப் பெற்று அழைத்துச்சென்றனர்.

[8ம் பக்கம் பார்க்க]

## ஆட்கொணர்வு மனுக்கள்:

# வைத்திய அறிக்கை சமர்ப்பிக்கஉத்தரவு

(கொழும்பு)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு பனாகொடை இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பரந்தனைச் சேர்ந்த என் சுப்பிரமணியம் மீதான ஆட்கொணர்வுமனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீதியரசர்கள் திரு ரணசிங்கா, திரு டி. அல்விஸ் ஆகியோர் முன்னிலையில் நேற்று விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

இம்மனு மீதான விசாரணையின் போது கொழும்பு மாவட்ட வைத்திய அதிகாரியை பனாகொடை இராணுவ முகாமுக்குச் சென்று சுப்பிரமணியத்தை பரிசோதித்து இம் மாதம் 25-ம் திகதிக்குமுன் வைத்திய அறிக்கை சமர்பிக்கு

(8-ம் பக்கம் பார்க்க)

## ★ "அரசுக்கு எதிராக வாக்களித்து

# வடக்கு ராணுவ ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வையுங்கள்!"

## சுன்னாகத்தில் டாக்டர் கொல்வின்

[யாழ்ப்பாணம்]

வடபகுதியில் நடைபெறும் இராணுவ ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க அரசுக்கு எதிராக வாக்களியுங்கள்'' என்று ஜனாதிபதிதேர்தலில் இலங்கை சமசமாஜக்கட்சி சார்பில் அபேட்சகராகப் போட்டியிடும் கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா, சுன்னாகம் சந்தை மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்ற பிரசாரக்கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

சமசமாஜக் கட்சியின் மானிப்பாய் தொகுதி அமைப்பாளர் திரு. கே. நடராசா தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

சுன்னாகம் சந்தை பஸ் நிலையம் பூராவும் சிவப்பு நிறக் கொடிகளால் அயிங்கரிக்கப்பட்டிருந்தன.

[8-ம் பக்கம் பார்க்க]

## நாளை யாழ். வரும்

# கொப்பகடுவவுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்க ஏற்பாடு

[யாழ்ப்பாணம்]

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் சிறீலங்கா சுதந்திரக் கட்சி அபேட்சகரான் திரு. ஹெக்டர்கொப்பேகடுவ நாளை 10ம் திகதி வடபகுதிக்கு விஜயம் செய்யும்பொழுது சிறப்பான வரவேற்பளிப்பதற்கு கட்சிப் பிரமுகர்கள் ஏத்பாடு செய்துள்ளனர்.

### பலாலி விமான நிலையத்தில்

நாளை ஞாயிறு காலை ஏழு மணிக்கு பலாலி விமான நிலையத்தை வந்தடையும் திரு. ஹெக்டர் கொப்பேகடுவவை வடபகுதி சிறீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் வாலிப இயக்கங்கள், முற்போக்கு இயக்கங்கள், விவசாயிகள் சங்கங்கள், மற்றும் கட்சிகள் கூட்டாக வரவேற்கவுள்ளனர்.

திரு. ஹெக்டர் கொப்பேகடுவவுடன் சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் உப தலைவர்கள் திருவாளர்கள் கே. சண்

(8-ம் பக்கம் பார்க்க)

# "ஈழம் கோரிக்கையை கிழக்கு புறக்கணித்துவிட்டது'

## மட்டுநகரில் ஜே. ஆர்.

[மட்டக்களப்பு நிருபர் இரா துரைரத்தினம்]

''ஈழம்' கோரிக்கையை கிழக்கு மக்கள் புறக்கணித்துவிட்டார்கள், கடந்த பொதுத் தேர்தலில் கிழக்கில் கூட்டணியினருக்கு கிடைத்த வாக்குகள் 77 ஆயிரம் அவர்களுக்கு எதிராக 1 லட்சத்து 50 ஆயிரம் வாக்களிக்கப்பட்டன'' என்று நேற்று மட்டக்களப்பு காந்தி மைதானத்தில் ஜனாதிபதி திரு.ஜே.ஆர். ஜெயவர்த்தன கூறினார்.

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக்கூட்டம் அமைச்சர் திரு செ. இராசதுரை தலைமையில் நடைபெற்றது.

திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன தொடர்ந்து பேசுகையில் இனியும் ஈழக்கோரிக்கை என்ற பேச்சுக்கு கிழக்கில் இடமில்லை'' என்றார்.

# வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

புனரமைக்கப்பெற்ற C. 90, C. 50, C. 70 மோட்டார் சைக்கிள்களும் DELICA வான்களும் விற்பனைக்குண்டு. மற்றும் எந்தவிதமான வாகனங்களும் குறைந்த விலையில் ஆட்களுக்கு நேரடியாகத் தருவித்துக் கொடுப்போம். நா. சாம்பசிவம் அன் கோ. 54 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.
4563

யாழ்ப்பாணம் மாட்டீன் ஒழுங்கையில் 37ம்நம்பர் இலக்கத்தில் 1 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: யஸ்ரீன் பஸ்தியாம்பிள்ளை 9/6, நந்தாவனம் ஒழுங்கை, வேம்படி றோட், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரிலோ, கடிதமூலமோ தொடர்பு கொள்ளவும்.
4718

7 K V A Petter டீசல் ஜெனரேட்டர் லண்டனிலிருந்து தருவிக்கப்பட்டது. நல்ல நிலையிலுள்ளது. உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: வே. சின்னையா. ஏழாலை தெற்கு உபதபால் கந்தோருக்கு அருகாமையில்.
(4747)

நாச்சிமார் கோவிலடியில் (கேசாவில் பிள்ளையார் வீதியில்) இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். செல்லமுத்து காட்வெயர்ஸ் ஸ்ரோர்ஸ், 173, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். (4780)

நல்லூர் கல்விக்கந்தோருக்கு அருகாமையிலுள்ள செல்லர் றோட்டில் வீட்டுடன் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: ச. வரதராஜன், 15, முருகேசர் லேன், நல்லூர்.
(4764)

## தேவை

அனுபவம் வாய்ந்த பைண்டர் தேவை. நேரில் வரவும். சித்ரா அச்சகம், 310, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.
(4777)

நல்ல வருமானமுள்ள கிறைண்டிங் மில் கைத்தொழில் ஆகியவற்றிற்கு பங்காளர் தேவை. முதலீடு தருபவர்கட்கு நல்ல வட்டி வழங்கப்படும். லோகராசா, 159/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (4779)

பருத்தித்துறை டிஸ்பென்சரியில் வேலை செய்வதற்கு பெண் உதவியாளர் தேவை. 15-10-82க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 4782, மே/பா ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம்.
(4782)

யாழ் நகரிலுள்ள பிரபல நிறுவனத்திற்கு சனி, ஞாயிறு கிழமைகளில் நடனம், வயலின் கற்பிக்க தகுதி வாய்ந்த ஆசிரியை தேவை. உடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 4783, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம்.
(4783)

## தேவை

Tourist Guest House நாடத்துவதற்கு சுண்டிக்குளி, கச்சேரி எல்லைக்குள் சகல வசதிகளுடன் வீடு தேவை. R. மகேந்திரன், G. P. S. வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். (4778)

## சோதிடம்

வெளிநாடு செல்லுதல், தொழில், கல்வி, திருமணம் முதலியன. குறிப்புடன் ரூபா 10/- அனுப்புக. K. L. M. Krishnapillaiy, ஸ்ரீ பராசக்தி சோதிடநிலையம், 83, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம், (4772)

## பயிற்சி

மோட்டார் மெக்கானிக் பயிற்சி 25-10-82 ஆரம்பமாகின்றது. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி, 9/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (4771)

றேடியோ — டெலிவிஷன், ஏயர்கொண்டிசனிங், வெல்டிங் மூன்று மாத டிப்ளோமா பயிற்சிகள் Spoken English ரெலெக்ஸ் Hotel Management பயிற்சிகளிற்கும் 10-10-82 வரை மாணவர்கள் அனுமதிக்கப்படுவர். விபரங்களுக்கு: The School of Computer Studies, 52, கனகரத்தினம் கட்டிடம் மேல்மாடி, வீனஸ் றெக்கோடிங் பாரி மேல்மாடி, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். (4741)

## வாடகைக்கு

யாழ். நகரில் மாணவிகளுக்கு சாப்பாட்டுடனும் சகல வசதிகளுடனும் தங்குவதற்கு இடமுண்டு. தொடர்பு: மல்ரி சேவிசஸ் தடன்லப் ஸ்ரோர்ஸ், 234, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 4775

# மரம்கடத்தல்வழக்கு: எதிரிகள் ரூ.2000 பிணையில் அனுமதி

(சாவகச்சேரி)

அனுமதிப்பத்திரமின்றி 15 வெட்டுமரங்களைக் கொண்டு வந்ததாகக் குற்றம்சாட்டப்பட்டவழக்கில் எதிரிகள் தலா 2000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். லொறியை 75,000 ரூபா பிணையில் எடுத்துசெல்ல நீதிபதி அனுமதித்தார்.

இவ்வழக்கு சாவகச்சேரி மாவட்டநீதிமன்றத்தில் நீதிபதி எம் எச் காரியப்பர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் 15 வெட்டு மரங்களை அனுமதிப்பத்திரமின்றி கொண்டு வந்ததாக செல்லப்பா சிவராசா, பொன்னம்பலம் மகாலிங்கம், செல்லன் தியாகராசா ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

கிளிநொச்சி வனபரிபாலனப் பகுதியினரால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

நீதிபதி எதிரிகளை தலா 2000 ரூபா பிணையிலும் லொறியை 75,000 பிணையிலும் செல்ல அனுமதித்தார். (க)

# "ஐக்கிய நாணய சங்கங்கள் சீரழிவு: நிர்வாக நேர்மையின்மையும் காரணம்

## கூட்டுறவு உதவி ஆணையாளர் கூறுகிறார்

(மாவிட்டபுரம்)

"ஐக்கிய நாணய சங்கங்களின் சீரழிவுக்கு நேர்மையின்மையுடன் செயல்படும் நிர்வாகிகளும் காரணமாகும். 2வருடங்கள் எண்பார்வையில்லாதிருக்கும்ஐக்கியநாணய சங்கங்களை குலைப்பதே முறையாகும். ஆனால் அந்நிலைக்கு வரவிடாது இச்சங்கங்களை திறம்பட இயக்க கிராமமக்கள் முன்வரவேண்டும்".

இவ்வாறு மாவிட்டபுரம் வடக்கு ஐக்கிய சிக்கன கடனுதவிச் சங்கத்தின் கூட்டமொன்று சங்க அலுவலகத்தில் நடைபெற்ற சமயம் அதில் கலந்துரையாற்றிய யாழ், கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. வி, நடராஜா கூறினார். திரு. ஞா.வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;–

"நமது நாட்டில் ஐக்கிய நாணய சங்கங்களாகவே கூட்டுறவு இயக்கம் ஆரம்பமாகியது. ஆனால் இப்போது பல்வேறு கூட்டுறவு அமைப்புகள் உருவாகி விட்டன. இதனால் ஐக்கிய நாணய சங்கங்கள் பின்தள்ளப்பட்டு விட்டன. கூட்டுறவு இலாகா உத்தியோகத்தர்களும் பெரிய அமைப்புகளை கண்காணித்து வந்தமையால் ஐக்கிய நாணய சங்கங்களை கவனிக்க முடியவில்லை. இதன் காரணமாக இச்சங்கங்களில் பல செயலிழந்து விட்டன, பல ஆண்டுகளாக ஒரே நிர்வாகிகளின் கீழ் பெயரளவில் மட்டும் சில சங்கங்கள் இயங்கிவருகின்றன. ஒரிரு சங்கங்களே திறம்பட இயங்குகின்றன. இந்நிலை மாறி ஐக்கிய நாணய சங்கங்கள் சிறப்பாக இயங்க நாம்வழிவகுக்க வேண்டும்" என்றார்.

யாழ் கூட்டுறவுஉதவி ஆணையாளர் திரு. ச. ஞானப்பிரகாசம் பேசுகையில் கூறியதாவது.

வடக்கிலே கூட்டுறவு இயக்கம் சிறப்புற இயங்குவதாக கூறிக் கொள்கிறோம் ஆனால் ஐக்கிய நாணய சங்கங்களைப் பொறுத்தவரை தென்பகுதியிலேயே அவைசிறப்புற இயங்குகின்றன. சேமிப்பு, கடன் மட்டுமல்லாது தொழில்துறைகளிலும் இச்சங்கங்கள் ஈடுபட்டு செயல்புரிகின்றன. சிறுவர்கள் மகளிர் கூட இச்சங்கங்களில் ஈடுபட்டு உழைக்கிறார்கள்.

நமது பகுதியில் 361 ஐக்கிய நாணய சங்கங்கள் உள்ளன. இதில் 100 சங்கங்ளே சிறப்புற இயங்குகின்றன. கிராமங்களில் இயங்கி பலவழிகளிலும் சேவையாற்றக்கூடிய இச்சங்கங்களை கிராமமக்கள் சிறப்பாக வளர்த்தெடுக்க வேண்டும். தற்போது புதிதாகவும் ஐக்கிய நாணய சங்கங்களை அமைக்க அனுமதி கிடைத்துள்ளது. ஆகவே மேலும் ஐக்கிய நாணய சங்கங்களை அமைக்கவும் கிராம மக்கள் முன்வர வேண்டும் என்றார்.

மாவிட்டபுரம் வடக்கு ஐக்கிய சிக்கன கடனுதவிச்சங்கம்சிறப்புற இயங்குவதுகுறித்தும் இவர்கள் பாராட்டு தெரிவித்தனர்..

## அஞ்சலி

(கிளிநொச்சி)

"கடந்த 35 ஆண்டுகளிற்கு மேலாக அரச சேவையில் ஈடுபட்டு கிளிநொச்சி பகுதி மக்களுக்கு பெருந்தொண்டாற்றிய கிராம சேவை அலுவலரும் சமூக சேவையாளருமாகிய அமரர் மகாலிங்கத்தின் திடீர் மறைவு எம்மை துயரத்தில் ஆழ்த்தியுள்ளது."

இவ்வாறு மறைந்த கிராம சேவை அலுவலர் கே. மகாலிங்கத்தின் இறுதிச் சடங்கின் போது அஞ்சலி உரைநிகழ்த்துகையில் கிளிநொச்தி எம். பி. திரு. ஆனந்தசங்கரி குறிப்பிட்டார்.

மற்றும்பலரும் அஞ்சலி உரைநிகழ்த்தினர்.

## நாட்டியவிழாவும் அரங்கேற்றமும்



வண்ணார் பண்ணை ஸ்ரீசண்முகானந்த பரதநாட்டியப் பள்ளி நலன் புரிச்சபை அளிக்கும் 3வது 'சதங்கை நாதம்' நாட்டிய நிகழ்ச்சி நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் இந்துச்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவர் திரு. சு. நடராசா அவர்களை பிரதம விருந்தினராக கொண்டு நடைபெறுகிறது. 31 மாணவிகள் பங்குபற்றும் இந்நிகழ்ச்சியில் சாஸ்திரிய நடனங்கள், கிராமிய நடனங்கள் விசேடமாக 'இராவணஹாரம்' என்றநாட்டியநாடகமும இடம்பெறுகின்றன இந்நாட்டியப்பள்ளியின் அதிபர் செல்வி மு. அன்னபூரணி சென்ற ஆண்டுகளில் ந நாட்டு நடன அரங்குகளில் முதல்முறையாக லயநிருத்திய விந்நியாசம் செய்தது குறிப்பிடத்தக்கது.

## நீண்ட நேர தாமதம்

[கரவெட்டி]

கரவெட்டித் தபாற்கந்தோரில் தேசிய சேமிப்பு வங்கிக் கணக்கு, காசுக்கட்டளை, தபாற்கட்டளை, வானொலி-டெலிவிஷன் உத்தரவுப்பத்திரங்கள் ஆகிய அலுவல்களுக்காகச் செல்லும் பொது மக்கள் நீண்டநேரம் காத்திருக்கவேண்டியதாகவுள்ளது.

இத் தபாற்கந்தோரில் பிரஸ்தாப வேலைகளை ஒரே ஒரு உத்தியோகத்தர் மாத்திரமே கவனித்துவருவதாலேயே இத் தாமதம் ஏற்பட்டுவருவதாகத் தெரியவருகிறது.

## நவராத்திரி மனனப்போட்டி

(சுழிபுரம்)

குமரகுருபரனார் அருளிய 'சகலகலாவல்லி' மனனப் போட்டியை எதிர்வரும் நவராத்திரி தினத்தையொட்டி வழக்கம்பரை சனசமூக பஜனைச் சபையினர் நடாத்தவுள்ளனர். இப்போட்டியில் பன்னிரண்டு வயதுக்குட்பட்டவர்கள் மட்டுமேபங்குகொள்ளலாம். மனனப்போட்டி இம் மாதம் 24ம் திகதி வழக்கம்பரை அம்மன்கோவிலில் நடைபெறும்.

## உப தபாலகம் அமைக்கக் கோரிக்கை

[புலோலி]

கெருடாவில் பகுதிமக்களின் நன்மைகருதி கெருடாவிலில் உபதபால் நிலையமொன்றை அமைத்துத்தருமாறு தபால், தந்திதொடர்பு அமைச்சர், தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் ஆகியோரைக் கோருவதென கெருடாவில் கிராமோதயசபை தீர்மானித்துள்ளது.

கிராமோதய சபைக்கூட்டம் இக்கிராமோதயசபைத் தலைவர் திரு. பெ. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட ஏனைய தீர்மானங்களாவன:–

"கெருடாவில் இந்து தமிழ் கலவன் பாடசாலைக்கு நிரந்தர அதிபர் ஒருவரையும் மூன்று உதவி ஆசிரியர்களையும் அனுப்பிவைக்கவேண்டுமென பாராளுமன்ற உறுப்பினரையும், கல்வித்திணைக்களத்தையும் கோரவேண்டும்"

"உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்குப் பாராளுமன்ற உறுப்பினரின் உதவியைப் பெறவேண்டும்.

## பிணையில் செல்ல அனுமதி

(பலோலி)

அத்துமீறி வீட்டிற்குள் புகுந்து குற்றம்புரிய முயன்று றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த ஐவரையும் தலா 350 ரூபா பிணையில் செல்லுமாறு பருத்தித்துறை நீதவான் திரு. வி. பி. சுந்தரலிங்கம் உத்தரவிட்டார்.

கரணவாய் மூத்தவிநாயகர் கோவிலடியைச் சேர்ந்த வி. தர்மகுலராசா என்பவரது வீட்டில் அத்துமீறிப்புகுந்து குற்றப்புரிய முயன்றகுற்றத்தின்பேரில் என். அன்ரன், கு. ஜெகதீஸ்வரன், வ செல்வராசா, ச. அந்தோனிஜோன், வ. பாக்கியராசா ஆகிய ஐவரும் பருத்தித்துறைப் பொலிசாரினால் பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு றிமாண்டில்வைக்கப்பட்டிருந்தனர்.

இச்சந்தேகநபர்கள் மீண்டும் பருத்தித்துறை நீதவான் திரு வி பி. சுந்தரலிங்கம் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டபோதே நீதவான் தலா 350 ரூபா பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டார். (க,

## சந்திப்பு

கலை இலக்கிய ஆர்வலர் ஒன்றியத்தின் இரண்டாவது சந்திப்பு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நடேஸ்வராக் கல்லூரியில் த. சண்முகசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

# இந்தியாவில் இனக்கலவரங்களை விசாரிக்க

# விசேட நீதிமன்றங்கள் !

புதுடில்லி, அக். 8

இனக்கலவரங்களைவிசாரிக்க வென விசேட நீதிமன்றங்கள் இந்தியாவில் அமைக்கப்பட விருக்கின்றன. இதனை மத்திய உள்துறை அமைச்சர் திரு. பி. டி. சேத்தி லோக்சபாவில் தெரிவித்தார்.

நேற்றைய லோக்சபா கூட்டத்தின்போது இந்தியாவில் பரவலாக இடம்பெற்றுவரும் இனக்கலவரங்கள், சாதிக் கொடுமைகள் ஆகியன குறித்து நீண்டநேரமாக காரசாரமான விவாதங்கள் இடம் பெற்றன. இந்த விவாதங்களில் வட இந்திய நகரமான 'மீரட்டில்' அண்மையில் இடம்பெற்ற வன்முறைகள் குறித்தும் அங்கத்தவர்கள் பிரஸ்தாபித்தனர்.

உள்துறை அமைச்சர் திரு. பி. டி. சேத்தி இறுதியாகத் தமது உரையில் இந்தியாவில் இனக்கலவரங்கள், வகுப்பு வாதப் பிரச்னைகள் ஆகியன குறித்து விசாரணைகளை மேற்கொள்ள விசேட நீதிமன்றங்கள் அமைக்கப்படுமென்று தெரிவித்ததுடன், இதற்கான ஆலோசனைகளைச் சட்டத்துறையினரிடமிருந்து தாம் பெற்றுக் கொள்ளவிருப்பதாகவும் கூறினார். மேலும் அவர், மத்திய அரசில்மட்டுமல்லாது. மாநிலங்களிலும் இதுபோன்ற விசேட நீதிமன்றங்களை நிறுவ சகல மாநில அரசுகளையும் தாம் கேட்டுக்கொள்ளவிருப்பதாகத் தெரிவித்தார். அத்துடன் வெகு விரைவில் சகல பாராளுமன்ற உறுப்பினர்களையும் அழைத்து இனக்கலவரங்கள் பரவாமலும், ஏற்படாமலும் இருப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து ஆராய விருப்பதாகவும் அறிவித்தார்.

மீரட்நகர சம்பவங்கள் குறித்து அவர் தெரிவிக்கையில்; இப்பகுதியில் 32 பேர் வன்முறைகளுக்கு இலக்காகி மரணமடைந்துள்ளனரென்றும், பலர் சட்டவிரோத நடவடிக்கைகளில் இறங்கியதையடுத்து கைதாகியுள்ளனரென்றும், சட்டவிரோதமாக வைத்திருந்த பெருந்தொகையான ஆயுதங்களும் இப்பகுதியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

மத்திய பொலிஸ் சேவையில் அமைதிகாக்கும் அலுவல் படையொன்றையும் நிறுவி அதில் பல்வேறு இனங்களைச் சேர்ந்தோரையும் கடமையில் அமர்த்துவதென்று தெரிவிக்கப்பட்டது. (கி)

பிலிப்பைன்ஸில்

## ஆயரைக் கொலை செய்ய பாதிரிகளும் கன்னியாஸ்திரிகளும் சதி!

மணிலா, அக். 8

பிலிப்பைன்ஸ் மத்திய மாகாணமொன்றினைச்சேர்ந்த 75 கத்தோலிக்க பாதிரிமாரும், கன்னியாஸ்திரிகளும் தமது ஆயரைக் கொலைசெய்ய கம்யூனிஸ்ட் தீவிரவாதிகளுடன் சேர்ந்து சதித்திட்டம் வகுத்ததை பிலிப்பைன்ஸ் பாதுகாப்பமைச்சு கண்டுபிடித்துள்ளது.

கம்யூனிஸ்ட் தீவிரவாதிகளின் ஆவணமொன்று கைப்பற்றப்பட்டபோதே இந்தச் சதித்திட்டமும் அம்பலமாகிமாகியுள்ளது.

(7-ம் பக்கம் பார்க்க)

## லைபீரியாவில் மண்சரிவு 200 பேர் பலி

### இருதினங்கள் தேசியதுக்க தினமாக அனுஷ்டிப்பு

லண்டன், அக் 8

லைபீரியாவில் மண்சரிவொன்று ஏற்பட்டதையடுத்து அணைக்கட்டொன்று வெடித்ததனால் 200 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு ஏற்பட்டது.

இரும்பு அகழ்வுவேலைகளில் ஈடுபட்டுவந்த தொழிலாளர்களே இவ்வாறுபெருந்தொகையினராக மரணித்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது.

மீட்புவேலைகள் துரிதமாக நடைபெற்றுவருகின்ற போதிலும், கடும்மழை காரணமாகவும், அணைக்கட்டு சிதைவுற்றிருப்பதால் அழிவு நடைபெற்ற இடம் சேறும் சகதியுமாக இருப்பதனாலும், பாதிக்கப்பட்டோரை காப்பாற்றுவதில் சிரமங்கள் தோன்றியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

சியராலியோன் நாட்டுக்கும் லைபீரியாவுக்கு மிடையேயுள்ள எல்லைப்புறத்தை அண்டிய பகுதியிலேயே இப் பேரழிவு ஏற்பட்டுள்ளது.

லைபீரியா அரசாங்கம் இரண்டு நாட்களை துக்கதினமாக அனுஷ்டிக்கும்படி நாட்டு மக்களை கேட்டிருந்தது.

இதுவரை காயமடைந்தவர்கள் 39 பேர்காப்பாற்றப்பட்டுள்ளனர் இவர்களில் ஐவரின் நிலை மோசமாகவுள்ளது. மேலும் மண்சரிவுகள் ஏற்படக்கூடும் என்ற காரணத்தினால் இப் பகுதியை அண்டிய இடங்களிலுள்ள குடிமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கும் செல்லும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

கடந்தவருடம் இந்த அழிவு இடம்பெற்றுள்ள இடத்துக்கு

(7ம் பக்கம் பார்க்க)

மதுரையில்

## ரூ. 40 லட்சம் பெறுமதியான கடத்தல் பொருட்கள் சிக்கின!

சென்னை, அக். 8

மதுரை மாவட்ட சுங்கப்பரிசோதகர்களால் மேற்கொள்ளப்பட்ட வேட்டைகளின் போது சுமார் 40 லட்சம் ரூபா பெறுமதியான கடத்தல் பொருட்கள் கடந்தமாதத்தில் கைப்பற்றப்பட்டன வென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இக்கடத்தல் சம்பவங்களுடன் சம்பந்தப்பட்ட எட்டு இயந்திரப்படகுகளையும் நான்கு வாகனங்களையும் மதுரை சுங்கப்பப்பகுதியினர் கைப்பற்றியுள்ளதோடு 21 கடத்தல் காரர்களும் கைதாகியுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

இதேவேளை தஞ்சாவூருக்கருகிலுள்ள இடமொன்றில் சுங்கப் பகுதியினர் லொறியொன்றைத் தூரத்திச்சென்று அதிலிருந்த கடத்தல் பொருட்களைக் கைப்பற்றியுள்ளனர். இக்கடத்தல் பொருட்களில் பெருமளவு மின்கருவிகளும், துணிவகைகளும் காணப்பட்டனவென்றும், இவற்றின் மொத்தப் பெறுமதி ஏழு லட்சம் ரூபாக்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த லொறிவண்டியிலிருந்த சாரதியுட்பட எட்டுப் பேர் கைதுசெய்யப்பட்டிருப்பதுடன், லொறியும் கைப்பற்றப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை வேளையிலேயே இக்கடத்தல் முயற்சி முறியடிக்கப்பட்டது. [கி]

## கர்ப்பிணிகளுக்கு 'அஸ்பிரின்' ஆபத்தானது!

அமெரிக்கடாக்டர்கள் கருத்து

பொஸ்டன், அக். 8

கர்ப்பிணிப் பெண்கள் பிரவகாலத்தை அண்மிக்கும் போது 'அஸ்பிரின்' மாத்திரைகளை உட்கொள்ளக்கூடாதென்று அமெரிக்க டாக்டர்கள் குழுவொன்று எச்சரிக்கைவிடுத்துள்ளது.

இவ்வாறு 'அஸ்பிரின்' மாத்திரைகளை பிரசவகாலம்நெருங்கும்போது உட்கொள்ளும் பட்சத்தில் பிரசவத்தின் போது தாய்க்கும் குழந்தைக்கும் இரத்தப்போக்கு அதிகமாக இருக்குமென்று இம் மாத்திரையை தவிர்க்கவேண்டியதற்கான காரணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிநியூயோர்க்கில் இருந்து வளியாகும் மருத்துவ சஞ்சிகையொன்றிலேயே இதனைத் தெரிவித்திருக்கும் டாக்டர்கள் குழு, 'அஸ்பிரின்' கர்ப்பிணிப் பெண்களால் உட்கொள்ளப்படும் பட்சத்தில் வளர்ச்சி குறைவான, சிறிய குழந்தைகளும் பிரசவிக்கக் கூடுமென்றுதெரிவித்துள்ளது.

தமது ஆராய்ச்சி நிலையமொன்றில் அனுமதிக்கப்பட்டிருந்த 58 கர்ப்பிணிப்பெண்களில் 'அஸ்பிரின்' உட்கொள்ளாதவர்களுக்கு எவ்வித இரத்தப்போக்கும் காணப்படவில்லையென்றும் இவர்களில் பத்துப்பேர் பிரசவ தினத்துக்கு 5நாட்களுக்கு முன்னர் அஸ்பிரினை உட்கொண்டதால் கடுமையான இரத்தப்போக்கிற்கு உள்ளானார்கள் என்றும் குறிப்பிட்டனர்.

இவர்களுக்குப் பிறந்த குழந்தைகளின் தோலினுள்ளேயும் சிவப்புநிறப் புள்ளிகள் காணப்பட்டன என்றும், இப் புள்ளிகள் அக் குழந்தைகளின் கண்களிலுள்ள வெள்ளை விழிகளிலும் காணப்பட்டனவென்றும் தெரிவிக்கப்பட்டது. கி]





றுமிக்கோ

நாடறிந்த வர்ணக் குடும்பம்
தேடி வருகிறது உங்களை
யாழ்ப்பாணத்தில்

றுமிக்கோ இலச்சினை கொண்ட பொருட்கள்
உங்களுக்குப் புதியன வல்ல

- றுமிக்கோ இமல்சன் பெயிண்ட்
- றுமிக்கோ வார்ணிஷ்
- றுமிக்கோ தின்னர்
- றுமிக்கோ மெத்திலேட்டட் ஸ்பிரிட்
- றுமிக்கோ டர்ப்பன்டைன்

ஆகிய இத்தனையும், நீங்கள் இதுவரை கொழும்பிலும மற்று மிடங்களிலும் இருந்து தருவித்து உபயோகப் படுத்தி மகிழ்ந்தவைவே. இத் தரமிக்க பொருட்களை நீங்கள் உங்கள் கட்டிட, மற்றும் பூச்சு வேலைகளுக்கு இனிமேல் இலகுவாக யாழ்ப் பாணத்திலேயே பெற்றுக்கொள்ளலாம்

மனையழகு மிளிர உங்கள் மனைநாடி வருகிறது, தரமிக்க, நாடறிந்த றுமிக்கோ வர்ணக் குடும்பம் சகாய விலைகளில், எல்லாப் பெயிண்ட் விற்பனை நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்

**RUMECO INDUSTRIES LIMITED**

15, MELBOURNE AVENUE, COLOMBO 4.
TEL: 580632 T'GRAMS - "NORWES COLOMBO"

## மணிவாக்கு

இன்றல்ல, என்றுமே சகோதரத்துவம் தாருங்கள். வார்த்தைகளால் அல்ல செய்கையால், நடத்தையால்— நாம் யாவரும் உலகின் குழந்தைகள் நம் தோழர்கள் கொடுமை செய்யப்பட்டால், நாமும் கொடுமை செய்யப்பட்டிருக்கிறோம். அவர்களுடைய சுதந்திரம் பறிக்கப்பட்டால் நம்முடைய சுதந்திரமும் திடமாகாக இராது.

—செண்ட் பெனட்

# நமது நோக்கு

## ஐ. சி. எம். ஏ.

கணக்கியல் துறையில் லண்டன் ஐ. சி. எம். ஏ. சர்வதேச மதிப்புப் பெற்ற பரீட்சை. லண்டன் ஐ. சி. எம். ஏ. பரீட்சைநிறுவனம் நடத்தும் இத் தரமான பரீட்சை ஐந்து பாகங்களைக் கொண்டது. பாகங்களைத் தனியாகவும் ஒன்ருகவும் எடுக்கமுடியும்.

லண்டன்பரீட்சைகளுக்கு யாழ்ப்பாணத்தில் ஒரு விசேட மரியாதை உண்டென்பது எங்கள் அரசாங்கத்துக்கே விளங்கும்.

ஆயிரக்கணக்கான மாணவர்கள் இப்படிப்பை யாழ்ப்பாணத்தில் மேற்கொள்வதும், ஐந்நூறு பேருக்கு மேல் வருகிறநவம்டர் 20ம் தேதி ஆரம்பமாகும் பரீட்சையின் வெவ்வேறு பகுதிகளை எடுக்கவும் ஆயத்தஞ் செய்கிருர்கள்.

பெருமையில் பல்கலைக்கழக மருத்துவபொறியியல் பீடங்களுக்கொப்பான இக்கணக்கியல் படிப்பு யாழ்ப்பாணத்தில் கிட்டங்கிஅறைகளிலும். தனிப்பட்ட டியூஷன் வகுப்புகளிலும் நடைபெறுகின்றது. கொழும்பிலிருந்து விரிவுரையாளர்கள் வருவதுமுண்டு. இப்படி மாணவர்கள் தரத்தில் முதற் படியிலுள்ளவர்கள் பலர்—நூற்றுக்கணக்கானேர்—அரசாங்கத்தின் நியாயமற்ற பல்கலைக்கழக அனுமதிக்குப் பலியானவர்கள். அரசன் அநீதி விளைத்தாலும், தெய்வம் வழிகாட்டுகின்றது.

ஆதரவற்ற பட்டப்படிப்புக்குத் தகைமையுடைய மாணவர்களுக்கு கடந்த காலத்தில் லண்டன் பல்கலைக்கழகம் கைகொடுத்து உதவியது; இன்று யாழ்ப்பாணத்தில் உள்ளலண்டன் பரீட்சைப் பட்டதாரிகள் பட்டியல் அதனை விளக்கும்.

''தகைமைக்கே முதலிடம்''; இது லண்டனின் தாரகமந்திரம். சோதனை நிர்வாகம் சர்வதேச புகழ் பெற்ற பண்டம். குறித்த இடத்தில் குறித்த நேரத்தில் பரீட்சைநடந்தேதீரும்; மாணவர்களின் வசதிக்காக எந்த நாட்டிலும், பரீட்சார்த்திகள் எங்கு தொகை கூடியதோ அப்பகுதியில் சோதனை நடத்தப்படும்.

சர்வகலாசாலைப் படிப்பில் கூடுபட்டு, ஐ. சி. எம். ஏ. யில் தஞ்சம் பெற்ற பலர் குறுகிய காலத்தில் முழுப் பட்டம் பெற்று உலகில் பல பாகங்களிலும் பெரும் சம்பளம் பெற்று இன்பமாய் வாழ்கின்றனர். பொறியியலாளர்கள், டாக்டர்கள் அவர்களின் உழைப்பை நினைக்கமுடியாது.

'' நடப்பதெல்லாம் நன்மைக்கே'' என்று சொல்ல, இலங்கை அரசு பல்லிசொல்கிறது; கொழும்பின் பரீட்சை ஆணையாளர் இம்முறை பரீட்சை—நவம்பர் 20ல் ஆரம்பமாகிறது— யாழ்ப்பாணத்தில் நடைபெருமெதன அறிவித்திருக்கிருர்.

கடந்த ஏ. எல். பரீட்சையில் நடந்தசிறுகுழப்பத்தை வைத்து இந்த இலகுவான முடிவுக்கு வந்திருக்கிருர் பரீட்சை ஆணையாளர். எனவே லண்டனுக்கு அபாயச் சங்கை ஊத லண்டன 'ததாஸ்து' என்று நிலைமை புரியாமல் ஆசி வழங்கியது.

யாழ்ப்பாணதிறமைசாலி பரீட்சார்த்திகள் ''பனையிலிருந்து விழுந்தவரை மாடு (யானை) மிதிப்பதா?'' என்று, எதிர்ப்பில் கிளம்பியிருக்கின்றனர்.

500 பேருக்கு மேற்பட்ட மாணவமாணவிகள் கொழும்பு செல்வதெவ்வாறு? கொழும்பு மெயிலிலா? அல்லாது தனியார் கோச்சிலா? சட்டணம்; தக்க தருணத்தில் ஆசனம்? கொழும்பில் விடுதி- இவையெல்லாம் பரீட்சையில் தலையுடைக்கும் 'பாவங்களுக்கு' தகுந்த தண்டனையா? யாழ்ப்பாணத்துக்கு அடிக்குமேலடி!

குறிப்பிட்ட சில பரீட்சை நிலையங்களுக்குரிய பாதுகாப்பு ஏற்படுத்துவது அரசின் கடமை. ஜனாதிபதி தேர்தலில் வாக்காளர்களுக்கு பாதுகாப்பளிக்கமுன்வரும் அரசு இதற்கு பின்னிற்பதேன்?

லண்டன் பரீட்சைகளை, பாகுபாட்டுக்குப் பலியான பாவங்களை 'புலிகள்' தீண்டுமா?

யாழ். அரசாங்க அதிபர் தமது சாதுர்யத்தால் இதற்குத் தீர்வு காண்பாரென நம்புகின்ருேம்.

# யாழ்ப்பாணத்தின் மூன்று கண்கள்

## நாவலர், அருணுசலம், இராசரத்தினம்

ஸ்ரீமான் அருணுசலம் அவர்கள், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களின் சிந்தனைகளுக்கும் இந்த நூற்ருண்டின் சைவ எழுச்சிக்கும் இடையிலமைந்ததொரு சேதுபந்தனம் ஆவர்கள். சைவ வித்தியாவிருத்திச்சங்கத்தில் மகோந்நத யுத்தவீறு இச்சேதுபந்தனத்தின் வழி வந்ததேயாம்.

### நாவலரும் வட்டுக்கோட்டைச் சாத்திரசாலையும்

நாவலருக்கும் வட்டுக்கோட்டைக் கல்லூரிக்கும் ஒரே வயசு. நாவலர் இரண்டொரு மாசத்தால் மூத்தவர். கல்லூரி, தொடக்கத்தில் சர்வ சாத்திரசாலையாயிருந்தது. சமஸ்கிருதத்தை முதன் முதல் ஆரம்பஞ்செய்துவைத்தது வட்டுக்கோட்டைக் கல்லூரியேயாம். அங்கே சமஸ்கிருதத்தில் தேர்ச்சியுற்ற சுன்ருகத்து நாகநாத பண்டிதரே, சமஸ்கிருதத்தில் மகாமேதையாய் விளங்கிய சிவசங்கர பண்டிதரை அதில் வழிப்படுத்தியவர்.

பாதிரிமார், படித்தவர்கள் கிறிஸ்தவராய்த் தானேயிருக்க முடியும் என்று நம்பினுர்கள். காப்பிலிகளைப் பார்த்த கண்களாலேயே எவர்களையும் அவர்கள் பார்த்தார்கள். அதனுலேதான்வட்டுக்கோட்டைக் கல்லூரியை ஒரு சர்வகலாசாலை என்று சொல்லத்தக்க வகையில் நடத்திஞர்கள். வடக்கே எந்தச்சர்வகலாசாலையும் தொடங்கமுன் தொடங்கியது வட்டுக்கோட்டைக் கலைத்தாபனம்.

கலைக்கடலகள் அலைமோதிக் கொண்டெழுந்தன. இனி யாழ்ப்பாணத்தில் சைவத்துக் கிடமில்லையென்ற எண்ணம் எழுந்தது. ஆனுல் எதிர் பாராதமுறையில் மத்திய கல்லூரியிலிருந்து ஒரு மேகம் எழுந்து கலைக்கடல்களை ஆசமனஞ்செய்து ஏப்பம் இட்டது. அந்த மேகமே ஆறுமுக நாவலர்.

கணிதமேதை விசுவநாதபிள்ளை, தமிழ் தந்த தாமோதரம்பிள்ளை, நியாய இலக்கணஞ் செய்த வட்டுக்கோட்டை வேளாளன் முத்துக்குமாரர் சிதம்பரப்பிள்ளையாயினர். சிதம்பரப்பிள்ளை தமது வயிற்றைத் தொட்டுக் காட்டித் தாம் படிப்பிக்கும் மதபாடத்தைக் கைக்கொள்ள வேண்டாமென்று தம்மிடம் படிக்கும் மாணவருக்குச் சொன்னவர். அவருக்கு நாவலரைக் காணுதநாள் வீணுள்.

எத்தனையோ பெருங்குடும்பத்தைச் சேர்ந்த நிபுணர்கள் பெயரளவில் கிறிஸ்தவராபி

### முமமணிகள்

வட்டுக்கோட்டை ஈன்ற மும்மணிகள் கறல், ஹின்ஸ்பரி, பெரிய நெவின்ஸ் என்பவர்கள். அவர்கள் நாவலரின் திருநோக்கால் முறையே விச

## இந்துபோட் இராசரத்தினம்



இந்துபோட் மனேச்சர் அமரர் சு. இராஜரத்தினம் அவர்களை நினைவுபடுத்துமுகமாக 'நூற்ருண்டு நினைவுப் பணிக் குழுவினை' அமைத்து வரும் 'நடைமுறைத் தமிழ் இயக்கம்' என்ற இயக்கத்தின் பணியின் ஆக்கம் காுதி இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களால் வழங்கப் பெற்று வெளிவருகிறது இக்கட்டுரை.

## பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

(8ம் பக்கம் பார்க்க)

# லயன்ஸ் உலக சேவை தினம்

இன்றைய உலகில் சமூக சேவையில் ஈடுபட்டுள்ள ஸ்தாபனங்களில் சர்வதேச லயன்ஸ கழகங்கள் முன்னணியில் இருப்பது யாவரும் அறிந்ததே. 1917ம் ஆண்டு ஆனி மாதம் 7ம் திகதி சிக்காக்கோ நகரில் காப்புறுதி உத்தியோகத்தராக மெல்வின் ஜோன்ஸ் என்பவரது வேண்டுகோளின் பேரில் பல பிரதிநிதிகள் கூடிய பொழுதே இந்த இயக்கம் ஆரம்பமானது. இதை ஆரம்பித்து குறுகிய காலத்தில் மெல்வின் ஜோன்ஸ் தமது காப்புறுதி வேலையைக் கைவிட்டு, லயன்ஸ் சேவைக்காக முழுநேர ஊழியராக ஈடுபட்டு உழைத்தார். காலத்திற்குக் காலம் வளர்ந்துவந்து தற்போது ஏறக்குறைய 150 நாடுகளிடையே 29,000க்கு மேற்பட்ட சமுகங்களைக் கொண்ட இந்த ஸ்தாபனம் உலகம் முழுவதும் சேவையாற்றி வருகின்றது.

இலங்கையைப் பொறுத்த அளவில் இவ்வருடம் லயன்ஸ் மாவட்டம் தனது வெள்ளி விழாவைக் கொண்டாடுகின்றது இவ்வருடத்திய மாவட்ட ஆளுனராக சுறுசுறுப்பும், கம்பீரமும், திறமையான சேவை மனப்பான்மையும் கொண்ட டாக்டர் அரியம் நல்லையா அவர்கள் தெரிவுசெய்யப்பட்டு கடமையாற்றிவருகின்ருர். வடபகுதியைப் பொறுத்தளவில் உதவி மாவட்ட ஆளுநர் திரு. பி. தேவேந்திரன், வலயத்தலைவர்கள் திரு. கே. குணரத்தினம், திரு. கே. துரைராசா ஆகியோரின் கீழ் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, வட்டுக்கோட்டை, சாவகச்சேரி, வவுனியா, மன்னுர், முல்லைத்தீவு ஆகிய இடங்களில் இக்கழகங்கள் சேவையாற்றிவருகின்றன.

இவ்வியக்கம் இலங்கையிலேயே மிகப்பிரல்யம் பெற்றதோடு மட்டுமல்லாமல் சர்வதேச அரங்கிலும் ஒரு இடத்தைப் பெற்றுள்ளது. முன்னுள் மாவட்ட ஆளுநரான திரு. சக்கரவர்த்தி விஜேநாதன் அவர்கள் அற்லாண்டாவில் நடைபெற்ற சர்வதேச ஒன்றியத்தில் சர்வதேச இயக்குநராகத் தெரிபட்டு தென்கிழக்காசிய, ஆபிரிக்க பிராந்தியத்தில் பிரதிநிதியாக நம் நாட்டுக்கு பெருமை தேடித் தந்துள்ளார். இத்தகைய ஓர் உயர் ஸ்தாபனத்திற்கு இலங்கையின் சரித்திலேயே முதலாவதாக தெரிவு செய்யப்பெற்ற பெருமை இவரையே சாரும்.

இவ்வியக்கத்தை ஆரம்பித்த ஸ்தாபகர் திரு. மெல்வின் ஜோன்ஸ் அவர்கள் 1917-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 8-ந் திகதி பல்வேறு ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளை டலாஸ் நகரில் அமைத்து சேவையாற்றுவது பற்றி ஓர் இணைப்புக் கூட்டத்தை நடாத்திஞர். இந்த நினைவு தினத்தையே அகில உலகம் முழுவதும் சேவை தினமாக்க் கொண்டாடி வருகின்றனர். இத்தினத்திலேயே உலகெங்கும் இருக்கின்ற லயன்ஸ் கழகங்களில் இருக்கும் அங்கத்தவர்கள் சேவையில் ஈடுபட்டு இத்தினத்தை நினைவு கூருகின்றனர். அவர்கள் ஈடுபடும் சேவைகளில் சிலபின்வருமாறு:

1. இரத்ததான இயக்கம் பற்றிய பிரசாரம், 2. வைத்தியசாலை, அநாதைவிடுதிகள், வயோதிபர் இல்லங்கள் முதலியவற்றுக்கு விஜயம்செய்தல், 3 வறியவர்களுக்கு உணவு அளித்தல், 4 ஆடையற்றவர்களுக்கு புதிதோ, பழையதோ ஆன உடைகளை விநியோகித்தல், 5. கண்பார்வையற்றவர்களுக்கு உதவிசெய்தல். 6 இலவச வைத்திய பரிசோதனை முகாம் நடாத்து

### சட்டத்தரணி க. குணரத்தினம்

(வலயத் தலைவர், சர்வதேச லயன்ஸ்கழகம் மாவட்டம் 306B)

(5ம் பக்கம் பார்க்க)

# இலங்கைக் கிரிக்கட்:

## புதியகப்டின்; புதியபிரச்னை

இலங்கைக் கிரிக்கெட் அணியின்புதியகப்டின் திரு. ட்யூலிப் மென்டிஸ் அவர்களுக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

இன்றைய உலகில் கிரிக்கெட் ஒரு பிரபுத்துவ கூட்டத்தின் விளையாட்டெனக் கருதமுடியாது. உலகில் பல பாகங்களில் நடைபெறும் டெஸ்ட் விளையாட்டுகளை பல்லாயிரக்கணக்கான மக்கள் பார்த்து ரசிக்கின்றனர். அதற்கு மேலாக தொலைக்காட்சியிலும் வானொலியிலும் அதனைப் பார்ப்பதும் நேர்முக வர்ணனையைக்கேட்பதும் பலருக்கு தினசரி வாழ்க்கையின் முக்கிய பொழுதுபோக்காகும்.

இந்த வகையில் இலங்கை கிரிக்கெட் அணி டெஸ்ட் அந்தஸ்து பெற்றதை நாம் முன்னரே பாராட்டியிருக்கிறோம்.

இந்தப் பாராட்டுக்கமைய இலங்கைக் கிரிக்கெட் அணி இங்கிலாந்துக்கெதிராகவும், இந்தியாவுக்கெதிராகவும், பாகிஸ்தானுக்கெதிராகவும் துடுப்பெடுத்து விளையாடி, இக்குழந்தைப பருவத்திலேயே பாராட்டுப்பெற்றிருககின்றது.

இன்றைய புதிய கப்டின் ட்யூலிப் மென்டிஸ் சென்னை டெஸ்டில் அபாரமாக ஆடி இரண்டு இன்னிங்சுகளிலும் செஞ்சரி அடித்த சாதனையை எமது கொழும்பு நிருபர் வெகுவாகப் பாராட்டியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இன்றைய கப்டின் மென்டிஸ் தலைமையில் வருங்கால நிகழ்ச்சிகள்உயர்ச்சிஅடைய இடமுண்டு.

இந்த மகிழ்ச்சிகரமான சந்தர்ப்பத்தில் இலங்கைக் கிரிக்கெட்டுக்கு ஒரு சாபக்கேடுபோன்ற பிரச்னை கிளம்பியிருக்கிறது.

டெஸ்ட் கிரிக்கெட்டை வியாபார உலகம் சுரண்டத் தவருது. 15லட்ச ரூபாய் ஒப்பந்தத்தில் இரண்டு 'சீசனுக்கு' தென் ஆபிரிக்காவில் இலங்கைக் கோஷ்டி விளையாடுவதை ஒரு நிறுவனம் ஒழுக்குசெய்திருப்பதாகக் கதை.

பணமில்லாமல் டெஸ்ட் கிரிக்கெட் வளரமுடியாது. ஆனுல்அப்பணத்தை பாதகமான வழியில் சேகரிப்பதா?

'இன ஒதுக்கல்' என்ற காரணத்தால் தென்ஆபிரிக்காவை பகிஷ்கரிக்கவேண்டுமென்ற ஐ. நா. பொதுநல நாடு நிறுவனங்களின் தீர்மானத்துக்கு இலங்கை சம்மதம் கொடுத்திருக்கிறது.

எனவே வாழும் வளரும் இலங்கைக் கிரிக்கெட் அணி அவ்வித அபாயமான போட்டிகளில் கலந்துகொள்வதைத் தவிர்க்கவேண்டும்.

## சமாதான நீதவானக நியமனம்.

[பணடத்தரிப்பு]

அளவெட்டியைச் சேர்ந்தசட்டத்தரணி மு திருநாவுக்கரசு சமாதான நீதவானகநீதி அமைச்சினல் நியமிக்கப் பட்டுள்ளார்.

மல்லாகம் மாவட்ட நீதி மன்ற பதில் நீதிபதி திரு. கே. குணரத்தினம் முன்னிலையில் திரு திருநாவிக்கரசு சமாதான நீதவானகசத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். (வெ)

## புத்தகக்கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

நவாலி கிறிஸ்தவ இளைஞர் சங்கத்தின் புத்தகக்கண்கா சி நாளை மாலை மேற்படி சங்க இல்லத்தில் திரு. ஜே. ஜே த பிராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கண்காட்சியை நவாலி கிராமோதய சபைத் தலைவர் திரு பி. பரராஜசிங்கம் திறந்து வைப்பார்.

## ★ ஜனதிபதி தேர்தல்களம்

# "கலவரங்களின்போது தமிழர்களை ம. வி. மு. தொண்டர்கள் காப்பாற்றினர்கள்"- ரோகண விஜேவீரா

(மன்னர்)

"ஐ. தே க., ஸ்ரீ. ல. சு. க. ஆகியனவற்றின் ஆட்சிக் காலங்களில் பலமுறை இனக் கலவரங்கள் தூண்டிவிடப் பட்டன. தமிழ்மக்கள் கொலை செய்யப்பட்டனர் அவர்களது, உடமைகள் கொள்ளையடிக்கப் பட்டன. அப்போதெல்லாம் மக்கள் விடுதலை முன்னணித் தொண்டர்களே தமிழ்மக்களுக்குப் பாரதுகாப்பளித்தனர்"

இவ்வாறு கடந்தவெள்ளிக் கிழமை மன்னர் திறந்தவெளியரங்கில் நடைபெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் ஜனதிபதி தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் உரையாற்றிய திரு. ரோகணவிஜேவீர குறிப்பிட்டார்; அவர் தொடர்ந்து தமது உரையில் கூறியதாவது:

ஐ தே கட்சியினர் 77–ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் நாம் வெற்றி பெற்றால் அடிக்கடி வெளிநாடுகளுக்கெல்லாம் செல்ல மாட்டோம் என்று சொன்னர்கள் ஆனல் இப்போதுநடப்பதுஎன்ன? அமைச்சர்கள் எம். பிக்கள் எல்லோரும் அடிக்கடி வெளிநாட்டுக்குச் சென்று வருகின்றனர் வெளி நாட்டுக்கு போய்வருவதோடு கள்ளக்கடத்தல் தொழிலையும் செய்து வருகின்றனர்.

டானியல் என்ற எம். பி. வெளிநாட்டிலிருந்து கொண்டு வந்த யானைப் பொம்மைக்குள் தங்கமும் மணிக்கூடுகளையும் கடத்திவந்தது அம்பலத்திற்கு வந்தது. இவரைப்போல்வெளி நாடுசென்று வரும் அமைச்சர்களினதும் எம். பிக்களினதும் பெட்டிகளில் என்னென்ன கடத்தல் பொருட்கள் இருக்கின்றனவோ தெரியாது. புதிய பாராளுமன்றம் அமைப்பதற்கு எத்தனை கோடி ரூபா செலவிடப்பட்டது. இது யாருடைய பணம். புதிய பாராளுமன்றத்தில் வைக்கப் பட்டுள்ள ஒவ்வொரு கதிரைக்கும் ஒரு கோடி ரூபா வீதம் செலவிடப்பட்டுள்ளது. இவையெல்லாம் தேவைதானு? புதிய பாராளுமன்றத்திற்கு பல கோடிரூபா செலவிட்ட போது மன்னர்மாவட்டத்தின் அபிவிருத்திக்கு ஒரு கோடி ரூபாவேனும் செலவிட்டார்களா?

ஐ.தே. கட்சியின் ஆட்சியில் தான் வடபகுதியில் மிகப் பெரிய நூல் நிலையம் எரிக்கப் பட்டது. இதை தமிழ்மக்கள் ஒரு காலமும் மறந்துவிட மாட்டார்கள் சர்வாதிகாரி ஹிட்லர் கல்விநிலையங்களையும் நூல்நிலையங்களையும் அழிக்கக் கூடாதென கூறினர்.

அந்தச்சர்வாதிகாரியின் மனதிலுள்ள இரக்கம்கூட இன்றைய ஆட்சியாளரிடம்இல்லை வடபகுதியில் ஏற்படும் கலவரங்களை ஆயுதங்களினலும் அடக்குமுறையாலும் தீர்த்துவிடமுடியாது. அவையாவும் அரசியல் ரீதியாகத் தீர்த்து வைக்கப்பட வேண்டும்.

மக்கள் விடுதலை முன்னணி பொருட்களின் விலை அதிகரிப்பைவிரும்பவில்லை இந்நாட்டிலுள்ள வேலையில்லாப் பிரச்சனையை நீக்கும், 55 வயதிற்கு மேற்பட்ட விவசாயிகள், மேசன்மார், தச்சுவேலை செய்வோர் சகல தொழில் செய்வோருக்கும் பென்சன் வழங்கப்படும் சுபீட்சமான வாழ்வு வாழஇனபேதமற்றஆட்சி நடைபெற மன்னர் மாவட்ட வாக்காளர்கள் ஜனதிபதி தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணிக்கு வாக்களிக்க வேண்டும் என்றார். (கி)

## லயன்ஸ்...

(4–ம் பக்கத் தொடர்ச்சி)

தல், 7. சிரமதானப் பணிகளில் ஈடுபடுதல்.

பொதுவாக லயன்ஸ் கழகங்கள் செவிப்புலன், கட்புலன்இழந்தோருக்குச்சேவை, பொதுசனத் தொடர்பு, கல்வி, வயோதிபர் வலதுகுறைந்தோருடன் சேவையில் ஈடுபடல், தேசிய ஒற்றுமை, தெருப்பாதுகாப்பு, கிராமிய எழுச்சித்திட்டம், விளையாட்டு விவசாயம், வீட்டுத்தோட்டம், மதுவிலக்குப் போன்ற துறைகளில் சேவையாற்றிவருகின்றனர். இவற்றைவிட இடத்திற்கேற்றவாறு, சந்தர்ப்பத்துக்கேற்றவாறு ஆங்காங்கு எழுகின்ற பிரச்சனைகளைத் தீர்க்கக்கூடியமுறையில் உடனடியாகச் சேவையில் ஈடுபடுவதை விசேடமாக நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. இதை நாட்டிலே ஏற்பட்டுள்ள இனக்கலவரம், வெள்ளப்பாதிப்பு, புயல் நிவாரணம் போன்ற விடயங்களில் நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. தொழிலின்மை, விரக்திபோன்ற பல்வேறு சூழ்நிலைகளில் பாதிப்படைந்துள்ள இளைஞர் சமுதாயத் திற்குப் போதிய பயிற்சியையும், வழிகாட்டுதலையும் கொடுப்பதற்கு இக்கழகங்கள் பல்வேறு விதத்தில் முன்வந்துள்ளன. இத்தகைய சேவை மனப்பாங்கு கொண்டு உழைக்கின்ற இக்கழகங்களுக்கு பொதுமக்கள் தங்களால் இயன்ற உதவியைச் செய்து அவர்களை ஊக்கப்படுத்தி தாங்களும் சேவையில் ஈடுபடமுன் வரவேண்டும் சேவை செய்வதற்காக எவரும் ஒரு ஸ்தாபனத்திலோ, கழகத்திலோ அங்கத்தவராக இருக்கவேண்டிய அவசியமில்லை சிலருக்குச் சொந்தச்சூழ்நிலை காரணமாக இத்தகைய அங்கத்துவங்களில் ஈடுபட வசதியில்லாமல் இருக்கக்கூடும். அத்தகையோர் தங்களால் இயன்ற சரீர உதவியையோ, வேறு எவ்விதமான உதவியையோ கொடுத்து சேவையாற்ற வசதியாக லயன்ஸ் கழகங்கள் இயங்கிவருகின்றன. ஆகவே பொதுமக்கள் சேவைசெய்யும்பொருட்டு தங்கள் தங்கள்பகுதிகளிலுள்ள லயன்ஸ் கழகங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு மாவட்ட லயன்ஸ் கழக போவையினர் வேண்டுகோள் விடுகின்றனர்.


# மேர்ச்சன்ட் பினன்ஸ்

## லிமிட்டெட்.

(அங்கீகரிக்கப்பட்ட கிரெடிற் ஏஜென்சி)

## நிலையான வைப்புத் திட்டங்கள்

| காலம் | வருட வட்டி விகிதம் | |
|---|---|---|
| | மாதாந்த வட்டி கொடுத்தல் | காலமுடிவில் வட்டி கொடுத்தல் |
| 7 மாத வைப்பு | —— | 17% |
| 9 மாத வைப்பு | — | 22% |
| 1 வருட வைப்பு | 22% | 24% |
| 2 வருட வைப்பு | 22% | 26% |
| 3 வருட வைப்பு | 22% | 28% |

நிலையான வைப்புக்கணக்கு தொடங்குவதற்கு செலுத்தவேண்டிய குறைந்த தொகை ரூபா 1000/- மட்டுமே.

வட்டி மாதாந்தம், மூன்று மாதத்திற்கொரு முறை, ஆறு மாதத்திற்கொரு முறை, வருடமொருமுறை வைப்புப்பணம் கொடுத்தவர்களின் விருப்பப்படி கொடுக்கப்படும்.

1979–ம் ஆண்டின் 27–ம் இலக்க, நிதிக் கம்பனிகளைக் கட்டுப்படுத்தற் சட்டத்தின் 18–ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட 1981–ம் ஆண்டின் 1–ஆம் இலக்க விதிகளின் படி, கீழ்க்காணும் தகவல்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

கூட்டிணைக்கப்பட்ட தேதி : 2-05-1979.

**பிரதான தொழில்வகைகள்:** வியாபாரப் பொருட்களின் பொறுப்பில் கடன் வழங்கல், வங்கி, மறுதாபனக் கடன் ஒழுங்கு செய்தல், வர்த்தக வாகனங்கள் (லொறி) உழவு யந்திரங்கட்கு (ட்ராக்டர்) மினிபஸ் முதலியனவற்றிற்கு வாடகைக் கொள்வனவுக்குக் கடன் கொடுத்தல், இடைக்கால கடன் வழங்கல், காப்புறுதி செய்யப்பட்ட பண்டகசாலை வசதிகள்.

| | 31–3–80ல் முடிந்த ஏழு மாதத்திற்கு | 31–3–81ல் முடிந்த வருடத்திற்கு | 31–3–82ல்* முடிந்த வருடத்திற்கு |
|---|---|---|---|
| | ரூ, 000 | ரூ, 000 | ரூ, 000, |
| பங்கு மூலதனம் ... | 69, | 100, | 100, |
| ஒதுக்கிய நிதி ... | — | — | 300, |
| நிலையான கடன் முறிகள் ... | 460, | 585, | 597, |
| வைப்புக்கள் ... | 838 | 3,444, | 6,615, |
| பெற்ற கடன்கள் ... | — | — | — |
| வரிக்குமுன் லாபம் ... | 7, | 193, | 191, |
| வரிக்குபின் லாபம் ... | 7, | 193, | 191, |
| வழங்கப்பட்ட பங்குலாபங்கள் ... | — | 25% | 30% |

*இவ்வாண்டிற்குரிய கணக்கு கணக்காய்வாளர் கையில் இருக்கின்றது.

இயக்குநர்சபை :

டாக்டர் யோகு பசுபதி M.B.B.S. (Cey), D. C. H. (Lond), M.R C.P. (Lond). — தலைவர்
A. சோமசுந்தரம்பிள்ளை, B.A., F.C.A. — முகாமைத்துவ இயக்குநர்
K. லோகநாதன், B Sc. — நிறைவேற்று இயக்குநர்
S. மகேந்திரா, B Sc — இயக்குநர்–கடன் வசதிகள்
K. நடராசா, B.Sc., Bar-at-Law, Attorney-at-Law.
C. மகேசன், Attorney-at-Law
N. சிவசிதம்பரம், Retd. S.L.A S.

விபரங்கட்கு தொடர்புகொள்க:

தலைமைக் காரியாலயம்
129, கோவில் வீதி,
யாழ்ப்பாணம். தொலைபேசி: 24183

வழிகாட்டு அலுவலகம்
52/1, ராஜசிங்க ரோட்,
வெள்ளவத்தை. 83259



உத்தரவாதத்துடன் சென்னை-ரூபவாகினி ஏரியல் பொருத்திக் கொள்ளவும்

மற்றும் உங்கள் வீட்டு மங்களவைபவங்களை

## வீடியோவில் படம் பிடித்துக்கொள்ளவும்

# வீனஸ் றெக்கோடிங் றேடியோ வாச் வேக்ஸ்

ஸ்ரீதர் தியேட்டர் அருகாமையில் யாழ்ப்பாணம்.

## மன்னார் மாவட்ட சபை தீர்மானம்

(மன்னார்)

இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தினால் முருங்கனிலிருந்து களிமண் எடுத்துச் செல்வதற்காக புதிய காணிகளை குத்தகைக்கு வழங்குமாறு மன்னார் அரசாங்க அதிபருக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனத்திற்கு முருங்கனில் களிமண் எடுக்க குத்தகைக்கு காணிகள் வழங்கும்போது மாவட்ட அபிவிருத்தி சபையின் அனுமதியுடனேயே வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு மன்னார் மாவட்ட அபிவிருத்திசபை கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

## பௌதிகவியல் பரீட்சை

(மாவிட்டபுரம்]

இன்றுநடைபெறவுள்ள க. பொ. த. [உயர்தர] பௌதிகவியல் பாடப்பரீட்சை முன்னர் பரீட்சை இடம் பெற்ற அதே பரீட்சை நிலையங்களில், அதே பரீட்சை மேற்பார்வையாளர்களின் மேற்பார்வையில் இடம் பெறவுள்ளது.

முன்பு க. பொ. த. (உயர்தர] பரீட்சை நடைபெற்றசமயம் பரீட்சை வினாத்தாள்கள் கொள்ளையடிக்கப் பட்டதால் இப்பரீட்சை ஒத்திப் போடப்பட்டிருந்தது தெரிததே.

[வெ]

## பயிற்சி வகுப்பு

[கரவெட்டி]

உடுப்பிட்டி கல்வி வட்டார ஆரம்ப கீழ்ப்பிரிவு ஆசிரியர்களுக்கு ஞானசேவைக்காலப்பயிற்சி வகுப்பு இம்மாதம் 25ம் திகதி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் ஆரம்பமாகின்றது.

இப்பயிற்சி வகுப்பு தொடர்ந்து ஐந்து தினங்களுக்கு நடைபெறும் என்று உடுப்பிட்டி வட்டாரக்கல்வி அதிகாரி திரு. வீ கே. ஈசுரபாதம் தெரிவித்தார்.

## அங்குரார்ப்பணம்

(மன்னார்]

பேசாலை கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பேசாலை கால்நடை வளர்ப்போர் இளைஞர் கழகம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

பேசாலை கிராமோதய சபைத் தலைவர் திரு. அல்பிறட் குலாஸ் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட இக் கால் நடைவளர்ப்போர் இளைஞர் கழகத்தின் தலைவராக திரு. ரெக்ஸ்குலாஸ் தெரிவு செய்யப்பட்டார்.

இக்கழகத்தின் ஆலோசகராக உள்ளூராட்சி திணைக்கள ஆய்வு உத்தியோகத்தரான திரு. ஜெயசீலன் பெர்னாண்டோ தெரிவு செய்யப்பட்டார்.

## சேவைநலம் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலய அதிபராகப் பணிபுரிந்த திரு. வ. கந்தையாவின் சேவைநலம் பாராட்டுவிழா வித்தியாலய அதிபர் திருமதி. இ. இராமசாமி தலைமையில் எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் ம. சிமியாம்பிள்ளை மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்துவைக்க எதிர்க்கட்சித் தலைவர் அ. அமிர்தலிங்கம் வ. கந்தையாவின் உருவப் படத்தைத் திரைநீக்கம் செய்யவுள்ளார் வட்டாரக்கல்வி அதிகாரி பொ. சிவஞானசுந்தரம் நினைவுமரம் நாட்டவுள்ளார்.

S-LON
S-LON PLUMBERS ASSOCIATION

# இலங்கை, எஸ்-லோன் குழாய்த் தொழிலாளர் சங்கம்

இலங்கையில் குழாய்த் தொழிலாளர்களுக்கு
முன்னெப்பொழுதும் கிட்டாத ஒரு வாய்ப்பு.

எஸ்-லோன் உற்பத்திப் பொருட்களைக் குறித்துரைக்கும் குழாய்த் தொழிலாளர்களின் நலன் கருதி சங்கம் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்வது அவசியம் எனக் கருதினோம்.

ஆதலின், எஸ்-லோன் குழாய்த்தொழிலாளர் சங்கத்தில் ஓர் அங்கத்தவராகச் சேரும்படி உங்களை அழைக்கின்றோம்.

இதன்மூலம் நீங்கள் அனேக நன்மைகளைப் பெறுவீர்கள். அவற்றுட் சில:



பயிற்சி-விட்டத்தில் பெரியதும்சிறியதுமான குழாய்களைப் பொருத்துதல்



காலத்துக்குக்காலம் வெளிநாட்டில் இருவருக்கு விடுமுறை




திறமைச் சான்றிதழ்



பணமாக மிகையூதியங்கள்

இப்பிரவேசப் பத்திரத்தை நிரப்பி அனுப்பவும்:
எஸ்-லோன் குழாய்த் தொழிலாளர் சங்கம்,
54, பேங்க்ஷோல் வீதி, கொழும்பு 11.

பெயர் ____________________

முகவரி ____________________

CARADS

உற்பத்தியாளர்கள்
த மஹாராஜா ஆர்கனைசேஷன் லிமிட்டெட்

# உரும்பராயில் வழிப்பறி செய்யப்பட்ட நகைகள் மீட்பு!

(மாவிட்டபுரம்)

நகை வழிப்பறிச் சம்பவம் ஒன்று தொடர்பாக இரு நபர்கள் கைதாகியதுடன் நகைகளும்கைப்பற்றப்பட்டுள்ளன.

உரும்பராய் தெற்கைச் சேர்ந்த நகைக்கடை உரிமையாளரான எஸ். சதாசிவம் என்பவரிடமிருந்து 55 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளை வழிப்பறிசெய்தது தொடர்பாக விசாரணையிலீடுபட்டு வந்த சுன்னாகம் பொலிசார் இது சம்பந்தமாகக் கோண்டாவிலைச் சேர்ந்த இராசையா நவரத்தினம், கிளிநொச்சி உதயநகரைச் சேர்ந்த ரி. கந்தையா ஆகியோரைக்கைது செய்து விசாரணை செய்தனர்

இவர்களை விசாரணை செய்த தன் பயனாக வழிப்பறிசெய்யப்பட்ட நகைகளின் விபரம் தெரியவரவே பொலிசார் அவற்றை மீட்டுள்ளனர்.

இவர்களிருவரையும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தசமயம் றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. [அ]

## நடப்புவருட நிர்வாகிகள்

[யாழ்ப்பாணம்]

யாழ். கொட்டடி கிராம முன்னேற்ற சங்கத்தின் மாதர் அணி நடப்பு வருடநிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் து. சூரியகலா, செயலாளர்; பொ. றஞ்சனி, பொருளாளர்: து. ஜெகதீஸ்வரி, உபதலைவர்: சி. பிறேமாவதி, உபசெயலாளர், க. சிற்றேஸ்வரி, உபபொளாளர்: பொ. ஜெயந்தினி 6 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-15, 9-15
சனி, ஞாயிறு 2-30
அலாவுதீனும் அற்புதவிளக்கும்

சில தினங்கள் மட்டும்
ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு - சுபாஷினி
நெஞ்சத்தைக் கிள்ளாதே
(கலர்)

மனோகரா [யாழ் நகர்]
9-10-82—12-10-82
10-30 am, 2-15.4-45, 7-00, and 9-30
SPHINX
Color Scope

ராணி (யாழ் நகர்) தினசரி 10-30, 2-00, 6-00, 9-30.
கடைசி 2 தினங்கள்
ஜெமினி - சரோஜாதேவி - நாகேஷ்
பணமா பாசமா

வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ரயில் பயணங்களில்

லிடோ தினசரி 2 காட்சிகள்
[யாழ்ப்பாணம்]
VAMPIRE CIRCUS.

றீகல் 3-வது ஹவுஸ்புல் வாரம். 10 30,
[யாழ்.நகர்] 2-30, 6-15
9-30
ரஜனிகாந்த்-ரதி, ஜெய்சங்கர்
முரட்டுக்காளை
(கலர்)

சாந்தி யாழ்.நகர்]
Daily 5 shows
DOM DE LUISE
in
HOT STUFF
Action-Comedy-Color

வின்ஸர் குறிப்பிட்ட சிலதினங்கள்மட்டும்
(யாழ். நகர்) 2-வது மாதமாக
தினசரி 4 காட்சிகள்
சந்திரசேகர்--சுபாஷினி
பாலைவனச் சோலை

கடைசி வாரம்
ஸ்ரீதர் (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்-மஞ்சுளா-லதா
நேற்று இன்று நாளை

ராஜா (யாழ்.நகர்)

ஹவுஸ்புல்! ஹவுஸ்புல்!!
ஹவுஸ்புல்!!!
மாதர் கூட்டம்
அலைமோதுகிறது
தினசரி 4 காட்சிகள்
பாக்கியராஜ்-சரிதா
மௌன கீதங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)
வெள்ளிவிழாப்பட இயக்குநர் பாக்கியராஜ்

# இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 23ம் திகதி

சனிக்கிழமை
(9—10—82)

மேடம்: பல வழிகளாலும் பணவரவுக்கு இடமுண்டு, அறிஞர்கட்கு இன்று மகிழ்ச்சிகரமான தினம், பிள்ளைகளின் மூலம் பெருமைதரும் சம்பவங்கள் இடம்பெறும்.

இடபம்: உறவு முறைகளில் பிளவு ஏற்படும், பண விடயத்தில் பகை தோன்றலாம், தொழில்துறையில் அதிக கவனஞ் செலுத்தி வரவும்.

மிதுனம்: மனதில் அமைதி குன்றும், எதிரிகள் எக்காளமிடுவர், மறைந்த நினைவுகள் மீண்டும் தலைதூக்கும், அமைதியே நன்று

கடகம்: அடக்கமான நடவடிக்கைகளின் மூலம் மற்றவர்களின் மனதைக் கவருவீர்கள். முதியவர் ஒருவர் உங்கள் முன்னேற்றத்துக்கு வழி காட்டுவார்

சிங்கம்: எதிலும் அவசர போக்கைக் கடைப்பிடிப்பீர்கள், தரக்குறைவான தகவல்கள் கிடைக்கக்கூடும், பெரியவர் ஒருவருடன் கருத்துவேற்றுமை தோன்றலாம்

கன்னி: தன்மானவிருத்திக்கும் தனவரவிற்கும் இடமுண்டு, சிலருக்கு வாகனச்சுகமும் உண்டு, குடும்பத்தில் தென்றல் வீசும், உறவினர்கள் படையெடுத்துவருவார்கள்.

துலாம்: அறிவுப்பசிக்கு இன்று தாராளமாக விருந்து கிடைக்கும், ஆராய்ச்சியில ஆர்வம் பிறக்கும், படித்தவர்களின் ஆதரவும் உண்டு.

விருச்சிகம்: தவறுகள் நடக்காலம், நிலையும் தடுமாறும், நண்பர்களே காலைவாரிவிடக்கூடும், சிலருக்கு அன்னியவாசமும் ஏற்படலாம்.

தனு; இரக்கசிந்தை மேலிடும், மற்றவர்களுக்கு உதவுவதில் மகிழ்ச்சியடைவீர்கள், வீட்டிலுள்ளவர்களின் அன்பும் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும்.

மகரம்: எதிர்பாராத பணமுடை ஏற்படும், கடன்தொல்லைகளால் கஷ்டப்படுவீர்கள், தொழில்துறையில் தொல்லைகளும் தோன்றி மறையும்.

கும்பம்: மனம்போல்வாழ்வு இன்று மலரும், கடமையாற்றும் இடத்தில் சகதொழிலாளரின் ஒத்துழைப்பும் கிடைக்கும், சிலருக்கும் பதவி உயர்வுக்கும் இடமுண்டு.

மீனம்; வணிகர்களுக்குவியாபார விருத்தியுண்டு, கல்வித்துறையில் முன்னேற்றம் தென்படும், அறிஞர்கள் ஆதரவு தாராளமாகக் கிடைக்கலாம்.

சோதிடக் கலாநிதி

திருமலை
க. வேலுப்பிள்ளை

## லைபீரியாவில்....

[3ம் பக்கத் தொடர்ச்சி]

வந்திருந்த அகழ்வுநிபுணரான இங்கிலாந்தைச் சேர்ந்த திரு கிரஹாம்ஸ்பார் இப்பகுதியில் வாழ்ந்த மக்களிடம் மண் சரிவு ஏற்படக்கூடிய சாத்தியங்களை எடுத்துக்கூறி பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. [கி]

## ஆயரைக்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏஞ்ச ஹொபாயன் என்ற ஆயரே கொலை செய்யப்படவிருந்தவராவார். தொடர்ச்சியாக இவர் அரசுக்கு ஆதரவளித்து வாவதுடன் அரசுக்கு எதிராகச் செயல்பட்ட எ(.. பாதிரிமார்களைக் காட்டிக் கொடுத்ததுமே இவர் மீது அதிருப்தி ஏற்படக்காரணமாயிருந்ததென்றும் தெரிவிக்கப்பட்டது. (கி)

# இன்று பரதநாட்டிய அரங்கேற்றம்



செல்வி புளோறிடா பிரான்சிஸ் சேவியரின் (மதி) பரதநாட்டிய அரங்கேற்றம் இன்று சனிக்கிழமை மாலை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுகிறது. யாழ். மறைமாவட்டய ஆயர் பேரருட் திரு. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை தலைமையில் நடைபெறும். இந்நிகழ்ச்சிக்கு யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் கலாநிதி சு. வித்தியானந்தன் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்கிறார்.

செல்வி புளோறிடா சதங்கை நர்த்தனாலய ஆசிரியை திருமதி லீலா ஆறுமுகையாவின் மாணவியாவர்.

## நாவன்மை போட்டி

(யாழ்ப்பாணம்]

அகில இலங்கை ரீதியில் தமிழ் மொழி, ஆங்கிலமொழிகளில் சேர். பொன் இராமநாதன் நாவன்மைப் போட்டியை விவேகானந்த சபையினர் இவ்வாண்டு நடாத்த உள்ளனர்.

இப்போட்டியில் 15 முதல்25 வயது வரை உள்ள மாணவர்கள் மட்டுமே பங்கு பற்ற முடியும். போட்டிக்கான விண்ணப்பங்களை விவேகானந்த சபையின்கௌரவ பொதுச் செயலாளருக்கு இம்மாதம் 18ந் திகதிக்கு முன் அனுப்பவேண்டும். [உ]

## இடமாற்றம்

(கரவெட்டி)

யாழ். குருநகர் சென். ஜேம்ஸ். ஆலய பங்குத்தந்தை வண. பிதா. எஸ். எஸ். மங்களராசா அடிகளார் மன்னார் அரிப்புக்கும்: வண. பிதா பீ ஏ. சின்னராசா நெடுந்திவிற்கும், நெடுந்தீவு பங்குத்தந்தை வண. பிதா. பீட்டர் துரைரத்தினம் அடிகளார் குருநகருக்கும் இடமாற்றம் பெற்றுள்ளார்கள்,

## வாயுக் கிணறு கண்டுபிடிப்பு

புதுடில்லி, அக். 8

வடஇந்தியாவில் திருப்புராவுக்கருகில் வாயுக்கிணறு ஒன்று இந்திய எண்ணெய் நிலவாயுக் குழுவினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இத்தகவலை பெற்றோலிய அமைச்சர் திரு. சிவசங்கர் நேற்று லோகசபையில் தெரிவித்தார்.

இந்த நிலவாயுக் கிணறு 3,400 மீட்டர் ஆழத்தில் அமைந்துள்ளது. 6மில்லிமீட்டர் குழாய் ஒன்றினூடாக சுமார் 35,000 கலன் மீட்டர் வாயுவை இக்கிணற்றிலிருந்து பெறக்கூடியதாக இருக்கின்றதெனஅறிவிக்கப் பட்டது. [கி]

## புதிய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச்சங்க வெள்ளாந்தெரு 7ம் இலக்க கிளைக்குழு நிர்வாகிகள் தெரிவுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்- இ செல்வராஜா, செயலாளர்- வே. கிருஷ்ணானந்தன், உபதலைவர்-க. கோபாலகிருஷ்ணன், உபசெயலாளர்: மா. சுரேந்திரன், பொதுப்பிரதிநிதிகள்- மு. ஜெகதீசன், மா. செல்லப்பா.

## பாவனையாளர் பாதுகாப்புச் சட்டம் மீறப்படுகிறதாம்

(புலோலி)

வடமராட்சிப்பகுதியிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக் கிளைகளில் பாவனையாளர் பாதுகாப்புச்சட்டம் மீறப்படுவதாகவும், இதனால் பாவனையாளர்கள் பலத்த கஷ்டமனுபவித்து வருவதாகவும் பாவனையாளர்கள் யாழ். மாவட்ட உள்நாட்டு வர்த்தகத் திணைக்களத்திற்குப் புகார் செய்துள்ளனர். இது சம்பந்தமாகத் திணைக்களம் உரியநடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் கோரப்பட்டுள்ளது.

## வெற்றி தோல்வி இல்லை

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரியும், காங்கேசன்துறை யங்ரேயல் விளையாட்டுக்கழகமும் மோதிய சிநேகபூர்வ உதைபந்தாட்டப்போட்டியில் இரு தரப்பினரும் தலா ஒவ்வொரு கோல்களைப்போட்டதால் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிந்தது.

காங்கேசன்துறைப் பட்டின சபை மைதானத்தில் நடந்த இப்போட்டிக்கு திரு. கே தனபாலசிங்கம் நடுவராக கடமையாற்றினர். அ

## விவசாய ஆசிரியை

[அரியாலை]

நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயத்திற்கு விவசாய ஆசிரியையாக திருமதி உபயசேகரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த வித்தியாலய தில் முன்பு விவசாய ஆசிரியராகப் பணிபுரிந்த திரு. க. விக்கினேஸ்வரன் ஆசிரியபயிற்சிக் கலாசாலையில் பயிற்சிபெறச் சென்றுள்ளார். [அ]

## டேவிற்சன் கைது:
# 'ஜனநாயக விரோத செயல்'
## சுதந்திரக் கட்சி (வடகிளை) கண்டனம்

(யாழ்ப்பாணம்)

ஈழமாணவர் பொது மன்ற நிர்வாகச் செயலாளர் திரு மு. டேவிற்சன் கைது செய்யப்பட்டதை சிறீலங்கா சுதந்திரக் கட்சி வடபகுதிக்கிளை வன்மையாகக் கண்டித்து, தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாணத் தொகுதி அமைப்பாளர் திரு கு. விநோதன் தலைமையில் நேற்று நடைபெற்ற வடபகுதியிலுள்ள தொகுதி அமைப்பாளர்களின் கூட்டத்திலேயே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திரு டேவிற்சன் போன்றோர் கைது செய்யப்பட்டது ஜனநாயக விரோத செயலென்றும் அவரை உடனடியாக விடுதலை செய்யாவிடில், இம்மாதம் 20ம் திகதி சிறீலங்கா சுதந்திரக் கட்சி, ஜனாதிபதி தேர்தலில் வெற்றியீட்டினால் இவர்களை உடனடியாக விடுதலை செய்யப்படுவர்என்றும் அக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

''சிறிமா பண்டாரநாயக்கா குடியியல் உரிமை இல்லாத காரணத்தால் அவர் தலைமை வகிக்கும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த திரு ஹெக்டர் கொப்பேகடுவ வெற்றி பெற்றால் தேர்தல் வழக்கு மூலம் பதவி இழக்க நேரிடும்'' என்று லங்கா சமசமாஜக்கட்சி வேட்பாளர் கலாநிதி கொல்வின் ஆர், டி, சில்வா கூறிய கருத்தும் இக் கூட்டத்தில் ஆராயப்பட்டது, [மா]

## ஈவிரக்கமற்ற செயல்'

(யாழ்ப்பாணம்)

''ஈழமாணவர் பொதுமன்ற நிர்வாகச் செயலாளர் திரு. மு. டேவிட்சன் தாமாகவே பொலிசாரிடம் ஆஜரான போதும்அவர்ஜனநாயகவிரோதமான பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பது ஐ. தே. க. அரசாங்கம் அடிப்படையான மனித உரிமைகளையும், பேச்சு சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம், பிரசுரசுதந்திரம் ஆகிய அடிப்படை மனித உரிமைகள் அனைத்தையும் குழிதோண்டிப்புதைப்பதில் ஈவிரக்கமற்ற முறையில் செயல் படுவதையே எடுத்துக் காட்டுகிறது'

இவ்வாறு யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள தமிழ் தொழிற் சங்கக் கூட்டணி காரியாலயத்தில் நடைபெற்ற தீவிர வாதப் போக்குடைய ஒன்பது அமைப்புக்களின் கூட்டத்தில் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் மேலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களாவன:

''ஜனநாயக உரிமைகளைப் பறிக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அரசாங்கம் நீக்க வேண்டும். டேவிட்சனையும் சகல அரசியல் கைதிகளையும் உடனடியாக விடுதலை செய்யவேண்டும்',

திரு. செ.மாதவன் தலைமை வகித்தார்.

## வைத்திய....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாறு நீதியரசர்கள் உத்தரவிட்டனர்.

சுப்பிரமணியத்தை பனாகொடை இராணுவ முகாமுக்குச் சென்று பார்வையிட சட்டத்தரணி ரி. பாக்கியநாதன் சிரேஷ்ட சட்டத்தரணி எஸ். ஸி சந்திரகாசன் ஆகியோருக்கு அனுமதி வழங்குமாறும் நீதியரசர்கள் இராணுவத்தளபதிக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்கள்.

## மற்றொரு மனு

வேலணையைச்சேர்ந்த காசிப்பிள்ளை சுரேஷ்குமார் (23 வயது) ஆட்கொணர்வு மனு அவரது தாயார் காசிப்பிள்ளை வாலாம்பிகையினால் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீதியரசர் திரு.ரணசிங்கா நீதியரசர் திரு டி. அல்விஸ் ஆகியோர் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்டது.

ஆனையிறவு இராணுவ முகாமுக்குச் சென்று சுரேஷ்குமாரை பரிசோதித்து வைத்திய அறிக்கையை இம்மாதம் 25-ம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறும் யாழ். மாவட்ட வைத்திய அதிகாரிக்கு நீதியரசர்கள் உத்தரவிட்டனர்.

சுரேஷ்குமாரை அங்கு சென்று பார்வையிட சட்டத்தரணி சேவியருக்கு அனுமதி வழங்குமாறும் இராணுவத்தளபதிக்கு நீதியரசர்கள் உத்தரவிட்டனர்.

### பரந்தன் ஞானசேகரன்

பரந்தனைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் ஞானசேகரம் ஆட்கொணர்வு மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீதியரசர் ஜனாப் அப்துல் காதர், நீதியரசர் அபயவர்த்தன ஆகியோர் முன்னிலையில் நேற்று விசாரணைக் கெடுத்துக்கொள்ளப்பட்டது.

இவருக்கு எதிராககொழும்பு மேல்நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதுதொடர்பாக இவர் இம்மாதம் 13-ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராக்கப்படும் போது அங்கு அவரது வைத்திய அறிக்கையை சமர்ப்பிக்கும்படி கோருமாறு நீதியரசர்கள் உத்தரவிட்டனர். [இ வெ)

## யாழ்ப்பாணத்தில்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்து தமிழ்த் தொண்டாற்றினார்கள்.

### ஏமாற்ற விளைவு

இதனைக் கண்ட பாதிரிமார்கள் பெரிதும் ஏமாற்றமடைந்து, படிப்புக்கும் கிறிஸ்தமதம் பரவுதலுக்கும் வெகுதூரம் என்பதை உணர்ந்து, வட்டுக்கோட்டைச் சாத்திரசாலையைச் சாதாரணக் கல்லூரியாக்கிக்கொண்டு, கிராமப் பள்ளிகளில் கவனமெடுப்பாராயினார்கள்.

(நாளை வரும்)

## குருநகர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மாலை 3½ மணிக்கு யாழ். கல்விக் கந்தோருக்கு வந்த இராணுவத்தினர் அங்கு பொறுப்பதிகாரியாக இருந்த ஜனாப் எம். எம். மன்சூரின் அனுமதியைப்பெற்று மெட்ராஸ் மெயிலைத் தம்முடன் கூட்டிச் சென்றனர்.

குருநகர் இராணுவ முகாமில் மெட்ராஸ் மெயிலை புகைப்படம் பிடித்ததும், தேவையான போது அழைப்போம் என்ற குறிப்போடு இராணுவத்தினர் அவரை அனுப்பிவைத்தனர்.

சுமார் அரைமணி நேரத்துக்குள் அவர்விடுவிக்கப்பட்டு விட்டதாகத் தெரியவருகிறது. (மா)

# வல்வை, நெல்லியடியில் நேற்று ஏற்பட்ட பரபரப்பு

(கரவெட்டி நிருபர் எஸ். சுபேந்திரன்]

வல்வெட்டித்துறை, நெல்லியடி வங்கிகளுக்கு முன்னால் இருந்த 'மர்மப்' பார்சல் அப்பகுதிகளை நேற்றுப் பகல் பொழுது முழுவதையும் பரபரப்பில் ஆழ்த்திவிட்டது.

வல்வெட்டித்துறை மக்கள் வங்கி இரும்புக்கதவுடன் இணைக்கப்பட்டிருந்தது, ஒரு பார்சல் பெட்டி, இதில் ஒரு வயர்த்துண்டு வெளியே வந்திருந்தது.

அதிகாலையில் காணப்பட்ட இந்தப் பார்சல் சம்பந்தமாக பொலிசாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டிருந்தது. வேலைக்கு வந்த வங்கி ஊழியர் வேலைக்குப் போகாமல் நின்றனர். [வங்கி வாடிக்கையாளர் காத்துநின்றனர். வங்கி திறக்கப்படாதிருந்தது. மாலை நாலு மணிக்கு திடீரென்று அங்கு வந்த ஆடு ஒன்று பார்சலைத் தவறுதலாக தட்டியும் ஒன்றும் நடவாததால், பொலிசார் பார்சலைப் பிரித்துப் பார்த்தபோது இலைகுழைகள் குவிந்து கிடந்தன!

நெல்லியடியிலுள்ள இலங்கை வங்கிக்கு முன்னாலும் அதிகாலையில் ஒரு பார்சல் இருந்தது. பொலிசார் வந்தனர். குருநகர் இராணுவ முகாம் இரசாயன பகுப்பாளருக்காகக் காத்திருந்தனர். ஆனால் அவர்கள் வரவில்லை. வங்கி பூட்டப்பட்டிருந்தது, ஊழியர் வெளியே காத்து நின்றனர்.

மாலை 5 மணிக்கு தண்ணீர் வாளிக்குள் பார்சலைப்போட்ட பொலிசார், 'பயம் தெளிந்து' பிரித்துப் பார்த்தபோது 'ஷாம்பூ' போத்தல்கள் இருக்கக்கண்டனர்!

இந்தப்பார்சல் எஸ். ஆரியதாசா பொலிஸ் நிலையம் என்று விலாசமிடப்பட்டிருந்தது.

ஆகஸ்ட் மாதம் 6-ம் திகதியும் இதே போன்ற ஒரு பார்சல் இந்த வங்கி முன்னால் பெரும்பரபரப்பை ஏற்படுத்தி ஓய்ந்து விட்டது.

## கொப்பேகடுவ......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முகலிங்கம், கே. பி. இரத்நாயக்கா, உதவிச்செயலாளர்கள் திரு.விஜயகுமாரணதுங்க, கலாநிதி பிரேமதாஸ உடகம, ஆகியோரும் பிரசாரக் கூட்டங்களில் உரையாற்றிவருகின்றனர்.

திரு. கொப்பேகடுவ பின்வரும் பெதுக்கூட்டங்களில் உரை நிகழ்த்துவார்.

### கிளிநொச்சியில்

காலை 8 மணி திரு. க. சண்முகநாதன் தலைமையில் கிளிநொச்சி றொட்றிக்கோ மைதானம்.

### சாவகச்சேரி

காலை 9-15 மணி; திரு.எஸ். வேலாயுதம் தலைமையில் சாவகச்சேரி வாடிவீடு மைதானம்.

### அச்சுவேலியில்

காலை 9-45: திரு. ஆ. கந்தசாமி தலைமையில் தபால்நிலையம் முன்னிலையில்

### காங்கேசனில்

காலை10-15 கே. இலங்கைநாயகம் தலைமையில் காங்கேசன்துறைத் தியேட்டர் முன்னிலையில். பின்னர் தெல்லிப்பழை, மல்லாகம், அளவெட்டி, சண்டிலிப்பாய், சங்கானை, சித்தன்கேணி சந்திகளில் பொது வரவேற்பு

### சுழிபுரத்தில்

காலை 10-45: முன்னாள் அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் தலைமையில் பொதுவரவேற்பு

### இணுவிலில்

காலை 11-15 திரு.க. விசுவலிங்கம்தலைமையில் இணுவில் சந்தை மைதானத்தில் பொது வரவேற்பும் கூட்டமும்.

### நல்லூரில்

நண்பகல்: 12-00 மணி நல்லூர் கந்தசுவாமி கோவிலில் தரிசனம்.

12-15 அரசடி பாரதி சிலையடியில் வரவேற்பு.

12 :0 சிறீ நாகவிகாரையில் வழிபாடு.

### அஞ்சலி

நண்பகல் 12 -45 செல்வநாயகம் நினைவாலயம், அமரர் ஜி ஜி. பொன்னம்பலம் சமாதி, அல்பிரட் துரையப்பா சிலை ஆகியவற்றுக்கு அஞ்சலி.

1-00 மணி: குருநகரில் வரவேற்பு, 1-30 தேர்தலில் ஆதரவளிக்கும் அரசியல் கட்சித்தலைவர்கள் சந்திப்பு; 1-45 பத்திரிகையாளர் மகாநாடு

### புங்குடுதீவில்

பிற்பகல் 3-00 திரு. ப. கதிரவேலு தலைமையில் புங்குடுதீவில் வரவேற்பும், பொதுக் கூட்டமும்.

### நெல்லியடியில்

பி ப. 5-00 மணி: நெல்லியடியில் வரபேற்பு.

### பருத்தித்துறையில்

5-10 சட்டத்தரணி எஸ். ஜெயசிங்கம் தலைமையில் பருத்தித்துறை கடற்கரை மைதானத்தில் பெதுக்கூட்டம்.

### சுன்னாகத்தில்

மாலை 6-மணி திரு. எஸ். சிவஞானம் தலைமையில் சந்தை மைதானத்தில் பொதுக்கூட்டம்.

### யாழ். திறந்த வெளியரங்கு

இரவு 6-30 திரு.குமாரசாமி விநோதன் தலைமையில் யாழ் திறந்த வெளியரங்கு பொதுக் கூட்டம். [மா]

## தேர்தல் ஆட்சேப.,

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட அபிவிருத்திசபை தேர்தலின்போது தேர்தல் சட்ட நடைமுறைகடைப்பிடிக்கப்படாமல்போனதுடன் [அதிருப்தியும்நிலவியுள்ளதுஇதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று ஆறு வாக்குப் பெட்டிகள் காணமல் போனதாகும் என்பதை மனுதாரர் வெற்றிகரமாக நிலை நாட்டியுள்ளார் என்றுதெரிவித்துள்ள நீதியரசர்கள் இந்தமனுவின் நோக்கம் பொதுநலமாகும் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

இத்தேர்தல் தொடர்பாக மக்கள் மனங்களில் உருவாகியிருந்த மாசு படிந்த கருத்தினைப் போக்குவதற்கு இந்தத் தேர்தல் ஆட்சேபமனு உதவியுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தமது தீர்ப்பை ஆட்சேபிப்பதாயின் மனுதாரர் பத்து நாட்களுக்குள் உயர்நீதிமன்றத்துக்கு மனுசெய்ய அவகாசம் வழங்குவதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளார்.

## அப்பீல் செய்வார்

[கொழும்பு]

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தல் தொடர்பான வழக்குத்தீர்ப்பை ஆட்சேபித்து திரு ராஜ ராஜேஸ்வரன் தங்கராஜா உயர் நீதிமன்றத்துக்கு அப்பீல் செய்யப் போவதாகத்தெரிவித்தார். (இ]

## சுடரொளி கண்ணன் விசாரணை

(யாழ்ப்பாணம்)

சுடரொளி சஞ்சிகை ஆசிரியர் திரு. கண்ணன் யாழ். பொலிஸ் சி ஐ. டி. பிரிவினரால் நேற்று கொண்டு செல்லப்பட்டு விசாரணை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டார். டுள்ளார்.

அண்மையில் கைது செய்யப்பட்ட மாணவர் தலைவன் திரு. டேவிட்சன் விவகாரம் தொடர்பாக இவர் விசாரணை செய்யப்பட்டதாக தெரிய வருகிறது. (வண் நிரு.)

## இன்று

(யாழ்ப்பாணம்)

இணுவில் அ மி. த. க பாடசாலையில் இணுவில் கலை இலக்கிய வட்டத்தின் கால்கோள் விழாவும், பாரதி நூற்றுண்டு விழாவும் இன்று மாலை நடைபெறவுள்ளது,

## ..ப லிகண்டியில் இ.. றும் நாளையும்

(புலோலி)

பொலிகண்டி இளைஞர் விளையாட்டுக்கழகத்தின் 12வதுவருடாந்த விளையாட்டுப் போட்டியும் பரிசளிப்புவிழாவும் இன்று சனிக்கிழமையும், நாளையும் திரு. மு. சின்னத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

உடுப்பிட்டி எம். பி. திரு .த இராசலிங்கம், பருத்தித்துறை எம். பி திரு கே. துரைரத்தினம், மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினர் திரு. மு. தம்பிமுத்து ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்கின்றனர். பருத்தித் உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டதிகாரி செல்வி ஸ்ரீ வசந்தா கந்தசாமி பரிசில்களை வழங்குவார்.

அகில இலங்கை ரீதியில் 50 மைல் சைக்கிளோட்டம், 15 மைல் பெண்களுக்கான சைக்கிளோட்டம், 25 மைல் மரதன் ஓட்டம். தும்புக்கண்ணுடிவள்ள ஓட்டம் உட்பட இன்னும் பலபோட்டிகளும் இடம் பெறவுள்ளன. இரவு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (அ]

## வடக்கு ராணுவ...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா ஆங்கிலத்தில் பேசியதை திருமதி பத்மா சிவகுருநாதன் தமிழில்மொழி பெயர்ந்தார்.

''ஜனாதிபதி வருகையை எதிர்த்து பிரசுரம் அடித்து வெளிட்ட இளைஞர் டேவிற்சனை கைது செய்து சித்திரவதை செய்ததை அறிந்து கவலை தெரிவித்த கலாநிதி கொல்வின் கொழும்பிலும் டேவிற்சன் கைதுசெய்யப்பட்டது குறித்து பிரசாரம் செய்வதுடன் அவரை விடுதலை செய்யும்படியும் கோரிக்கை விடுக்கவுள்ளேன் என்று உறுதியளித்தார்.

சட்டத்தரணி ஆர். ஆர். தர்மரத்தினம், சட்டத்தரணி எம். சிவகுருநாதன், திருமதி விவியன் குணவர்த்தன ஆகியோரும் உரைநிகழ்த்தினர். [மா)

(சுழிபுரம்)

யாழ். மாவட்ட அபிவிருத்தி உப அலுவலக் சுழிபுரம் இலவச ஆயுள்வேத வைத்திய சாலைக்கு பத்தாயிரம் ரூபா பெறுமதியான மருந்துவகைகள் கொழும்பிலிருந்து வந்து சேர்ந்துள்ளது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under numbre Q B. 100236/81. Eelanaadu - P. O. Box: 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.